Registered as a Newspaper in Sri Lanka

[விலை ரூபா: 3-50

# ஈழநாதம்

THE EELANAATHAM

நாதம் 01 | பிரமோதூத ஹூ சித்திரை மீ 10ஆம் உ | திங்கட்கிழமை | (23 - 04 - 1990) | ஹிஜ்ரி 1410 | றம்ழான் 26 | ஓசை 64

## கச்சதீவுமீது இந்திய விமானப்படைக் ஹெலிகட்டர்கள்

(விசேட நிருபர்)

இந்திய விமானப்படைக்குச் சொந்தமான ஹெலிகப்டர் ஒன்று தினமும் பிற்பகலில் கச்சதீவிற்கு மேலாகப் பறந்து நோட்டமிட்டுச் செல்வதாக கச்சதீவிற்கு மீன் பிடிக்கச் சென்று திரும்பும் யாழ்ப்பாண மீனவர்கள் தெரிவிக்கின்றார்கள்.

வடக்குக் கிழக்கில் இருந்து இந்திய இராணுவம் வெளியேறிய பின்னர் இலங்கைக்கும் இந்தியாவிற்கும் இடையில் கச்சதீவு தொடர்பாக ஏற்பட்ட ஒப்பந்தத்தை ரத்துச் செய்யக் கோரிக்கைகள் விடப்படுவதும், கச்சதீவில் மத்திய அரசும் ஓரளவு அக்கறை காட்டுவதும் குறிப்பிடத்தக்கது.

அத்தோடு கடந்த ஒரு மாதத்தில் இந்திய மீனவர்கள் இலங்கையின் வட பகுதிக் கடற்பரப்பில் வைத்து மூன்றுமுறை விடுதலைப் புலிகளால் பிடிக்கப்பட்

( 6ஆம் பக்கம் பார்க்க )

## இலங்கையில் கடமை புரிந்த மே.ஜேர்மன் இராஜதந்திரி கைது

(பொன்)

ஸ்ரீலங்காவில் மேற்கு ஜேர்மன் தூதுவராலயத்தில் முன்பு பிரதித் தூதுவராகக் கடமையாற்றிய அதிகாரி ஒருவர் கிழக்கு ஜேர்மனிக்காக உளவு வேலைகளில் ஈடுபட்டிருந்தார் என்ற குற்றச்சாட்டின் பேரில் மே. ஜேர்மனியில் பொன் நகரில் கைதுசெய்யப்பட்டுள்ளார் என்று அரசாங்க வழக்குத் தொடுநர் வியாழனன்று தெரிவித்தார்.

54 வயதான இந்த நபர் கொழும்பில் மே. ஜேர்மன் தூதுவராலயத்தில் தொடர்ச்சியாக மூன்று வருடங்கள் கடமை புரிந்தார். பின்பு மே. ஜேர்மனியில் ஆசிய விவகாரத் திணைக்களத்தில் கடமையாற்றிய இவர், ஆசிய விவகாரங்களில் துறைசார்ந்த நிபுணரெனவும் கருதப்படுகிறது.

மேற்கு ஜேர்மனி சம்பந்தப்பட்ட இராஜதந்திரியின் பெயரை வெளியிட மறுத்துள்ளது.

## இன்று மாலை யாழ். முற்றவெளியில் தேனிசை நிகழ்ச்சி



தேனிசை செல்லப்பா

(யாழ்ப்பாணம்)

''சர்க்கரைப் பந்தலில் தேன்மாரி பொழிந்தது போல்'' என்ற பழமொழி இன்று பிற்பகல், யாழ்.முற்றவெளியில் தேனிசைச் செல்லப்பாவின் இசை நிகழ்ச்சியில் நிதர்சனமாகப் போகிறது.

பன்னிரெண்டு வருடங்களுக்குப் பின் யாழ்ப்பாணம் முற்றவெளி மைதானத்தில் இன்று மாலை நடைபெறும் தேனிசைச் செல்லப்பாவின் தமிழீழ எழுச்சி இசை விருந்தில், பிரபல தென்னிந்தியப் பாடகி செல்வி சொர்ணலதாவும் கலந்து கொண்டு இசை விருந்தளிக்கிறார்.

''நம்புங்கள் தமிழீழம் நாளை பிறக்கும்'' ''மறவர் படைதான் தமிழ்ப்படை'' போன்ற எழுச்சிக்கீதங்களைப் பாடிய தேனிசைச் செல்லப்பா தமிழருக்கென ஒரு நாடு வேண்டும் என்று குரல் எழுப்பிய ''நாம் தமிழர்'' இயக்கத் தலைவர் சி. பா. ஆதித்தனாருடன் சேர்ந்து உழைத்தவர் என்பது குறிப்பிடத்தக்கது.

இத்தேனிசை நிகழ்ச்சியில் விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணித் தலைவர் கோ. மகேந்திரராசா, விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணிப் பொதுச் செயலாளர் யோகரெட்னம் யோகி, கவிஞர்

(6 ஆம் பக்கம் பார்க்க)



சொர்ணலதா

# அரசின் அனுமதியில்லாமல் மத்தியகிழக்கில்வேலைஇல்லை

## வன்னியில்

## கற்கள் பெற முடியாததால் வீதித் திருத்தம் தாமதம்

(முள்ளியவளை)

வன்னிப்பிரதேசத்தில் வீதிச் சீர்திருத்த வேலைகளுக்கான கருங்கற்கள் பெருமளவில் செய்யமுடியாத நிலையில் இருப்பதாக பெருந்தெருக்கள் திணைக்கள அதிகாரிகள் அறிவித்துள்ளார்கள். வீதிகளுக்கு தேவையான கற்களை வெடி வைத்துத் தகர்ப்பதற்கு முன்பு அரசாங்கத்தால் ''டைனமற்'' வெடிமருந்துகள் அனுப்பி வைக்கப்படுவதுண்டு. இன்று தொழிலாளர்கள் மாற்று நடவடிக்கைகள் மூலம் பெருந்தொகையான கற்களைப்பெற முடியாத நிலை காரணமாக அபிவிருத்தி வேலைகளை துரிதகதியில் செய்யமுடியாதிருப்பதாக கவலை தெரிவித்துள்ளார்கள். (58)

## வேலை வாய்ப்பு முகவர்களுக்கு [illegible]!

(கொழும்பு)

வெளிநாட்டுத் தொழில் வாய்ப்பு முகவர் நிலையங்கள் வெளிநாட்டுத் தொழில் பிரோவின் (சபை) அங்கீகாரத்தைப் பெறாமல் எதிர் வரும் மே 4-ஆம் திகதியிலிருந்து தொழிலாளர்களை மத்திய கிழக்கு நாடுகளுக்கு அனுப்ப முடியாதாம்.

தொழில் அமைச்சு மேற்கொண்ட ஒரு முடிவின்படி தனியார் முகவர் நிலையங் ... ண்டு, பிரோ வழங்கும் பெயர்ப்பட்டியலில் இருந்து தகுதி உடையவர்களைத் ... என்று தொழில், தொழிற் பயிற்சி அமைச்சர் ஜி. எம். பிரேமச்சந்திரா தெரிவித்தார்

## யாழ். பொலிஸ் நிலையத்தில் சிங்கள பொலிசார் இடமாற்றம்

(கொழும்பு)

யாழ்ப்பாணம் கோட்டையில் உள்ள யாழ். பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றும் சில சிங்கள பொலிசாருக்கு

மேலும் சில சிங்களப்பொலிசாருக்கு இன்று அல்லது நாளை இந்த இடமாற்ற உத்தரவு கிடைக்கவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

## கொக்குத்தொடுவாய், நாயாறு பகுதி

## ஸ்தாபனங்கள் உதவவேண்டும்

(முள்ளியவளை)

1984ஆம் ஆண்டு வெள்ளப் பெருக்கினால் மிகவும் பாதிப்படைந்த நிலையில் உள்ள நாயாறு பாலத்தோடு அண்டிய வெள்ளம் வடியும் பாதை தற்போது புனர்நிர்மாண அமைச்சினால் தற்காலிகமாக சீர ... றாம் மைல் கல்லுக்கும் இடைப்பட்ட பாதை மட்டும் தான் திருத்த வேலை ஆரம்பிக்கப்பட்டுள்ளது. மிகுதி இருபத்தி இரண்டாம் மைல் கல்லுக்கு தூரத்திற்கான வேலைகள் செய்வதற்கான நடவடிக்கைகள் எதுவும் எடுக்கப்பட

# மத்தியகிழக்கில் வேலை இல்லை

## வேலை வாய்ப்பு முகவர்களுக்கு [illegible]!

(கொழும்பு)

**வெளிநாட்டுத் தொழில் வாய்ப்பு முகவர் நிலையங்கள் வெளிநாட்டுத் தொழில் பிரோவின் (சபை) அங்கீகாரத்தைப் பெறாமல் எதிர்வரும் மே 4-ஆம் திகதியிலிருந்து தொழிலாளர்களை மத்திய கிழக்கு நாடுகளுக்கு அனுப்ப முடியாதாம்.**

தொழில் அமைச்சு மேற்கொண்ட ஒரு முடிவின்படி தனியார் முகவர் நிலையங்கள் மத்திய கிழக்கு நாடுகளில் தொழில் செய்வதற்கு தொழிலாளர்களை அனுப்ப விரும்பினால் பிரோவின் அனுமதியைப் பெற வேண்டும்.

தனியார் முகவர் நிலையங்களுக்குப் பதவி வெற்றிடங்கள் கிடைக்கும் பட்சத்தில் முகவர் நிலையங்கள் வெளிநாட்டுத் தொழில் பிரோவுடன் தொடர்பு கொண்டு, பிரோ வழங்கும் பெயர்ப்பட்டியலில் இருந்து தகுதி உடையவர்களைத் தெரிவு செய்ய வேண்டும் என்று தொழில், தொழிற் பயிற்சி அமைச்சர் ஜி. எம். பிரேமச்சந்திரா தெரிவித்தார்

(6ஆம் பக்கம் பார்க்க)

## யாழ். பொலிஸ் நிலையத்தில் சிங்கள பொலிசார் இடமாற்றம்

(கொழும்பு)

யாழ்ப்பாணம் கோட்டையில் உள்ள யாழ். பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றும் சில சிங்கள பொலிசாருக்கு தென்பகுதிக்கு இடமாற்ற உத்தரவு பொலிஸ் தலைமையலுவலகத்தால் வழங்கப்பட்டுள்ளது,

மேலும் சில சிங்களப்பொலிசாருக்கு இன்று அல்லது நாளை இந்த இடமாற்ற உத்தரவு கிடைக்கவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இதனையடுத்து மேலும் தமிழ்ப்பொலிசார் இங்கு கடமைக்கு அனுப்பப்படவுள்ளனர்.

## யாழ். பழைய செயலகக் கட்டிடம் 20 லட்சரூபா செலவில் திருத்தம்

(கொழும்புத்துறை)

இந்திய இராணுவத்தினர் நிலைகொண்டிருந்த யாழ்ப்பாணம் பழைய செயலக கட்டடம் திருத்தியமைக்கப்படவுள்ளது.

இருபது லட்சம் ரூபாசெலவில் இந்தக் கட்டடம் குறுகிய காலத்தில் திருத்தம் செய்யப்படவுள்ளது.

இந்திய இராணுவம் 1987 அக்டோபரில் இங்கு வருமுன்னர் இக்கட்டடத்தில் தேர்தல் திணைக்களம், பாஸ்போட் அலுவலகம், பிறப்பு இறப்பு

(6ஆம் பக்கம் பார்க்க)

## ஆளுநர் நளின் எதிலும் பங்குபற்றாமல் திரும்பினார்

(யாழ்ப்பாணம்)

வடபகுதிக்கு விஜயம் செய்திருந்த வடக்கு கிழக்கு மாகாண கவனர் நளின் செனவிரட்ன எவ்வித காரணங்களும் தெரிவிக்காமலே பலாலியிலிருந்து வெளியேறிவிட்டார்.

நேற்று அவர் கச்சேரிக்கு விஜயம் செய்து புனரமைப்பு

(6ஆம் பக்கம் பார்க்க)

## வட-கிழக்கு அபிவிருத்திக்கு இரண்டாயிரம் கோடி ரூபாய்

(கொழும்பு)

வடக்குக் கிழக்கு மாகாணப் புனரமைப்புக்கு இரண்டாயிரம் கோடி ரூபாய் உடனடியாக ஒதுக்கப்பட்டுள்ளதாகவும் இந்நிதியை அமெரிக்கா வழங்க முன்வந்துள்ளதாகவும் ஜனாதிபதி செயலக வட்டாரங்களிலிருந்து தெரிய வருகிறது.

நிதிஅமைச்சரும் வடகிழக்கு மாகாண சமாதானக் குழுத் தலைவருமான ஜனாப் ஏ. ஸி. எஸ். ஹமீத் அண்மையில் தமிழீழ விடுதலை புலிகள் இயக்கத் தலைவர் பிரபாகரனைச் சந்தித்துப் பேசியபோது வடக்கு கிழக்கு மாகாணப் புனரமைப்புச் சம்பந்தமாகப் பேசப்பட்டதாகவும் இதைத் தொடர்ந்தே இரண்டாயிரம் கோடி ரூபாய் உதவி உடனடியாக வழங்கப்படுவதாகவும் கூறப்படுகிறது.

## கொக்குத்தொடுவாய், நாயாறு பகுதி

...செய்யமுடியாத நிலையில் இருப்பதாக பெருந்தெருக்கள் திணைக்கள அதிகாரிகள் அறிவித்துள்ளார்கள். வீதிகளுக்கு தேவையான கற்களை வெடிவைத்துத் தகர்ப்பதற்கு முன்பு அரசாங்கத்தால் "டைனமற்" ...தொகையான கற்களைப்பெற முடியாத நிலை காரணமாக அபிவிருத்தி வேலைகளை துரிதகதியில் செய்யமுடியாதிருப்பதாக கவலை தெரிவித்துள்ளார்கள். (58)

## ஸ்தாபனங்கள் உதவவேண்டும்

(முள்ளியவளை)

1984ஆம் ஆண்டு வெள்ளப்பெருக்கினால் மிகவும் பாதிப்படைந்த நிலையில் உள்ள நாயாறு பாலத்தோடு அண்டிய வெள்ளம் வடியும் பாதை தற்போது புனர்நிர்மாண அமைச்சினால் தற்காலிகமாக சீரமைக்கப்பட்டு வருகின்றது.

அதாவது பதினோராம் மைல் கல்லுக்கும், பதினாறாம் மைல் கல்லுக்கும் இடைப்பட்ட பாதை மட்டும் தான் திருத்த வேலை ஆரம்பிக்கப்பட்டுள்ளது. மிகுதி இருபத்தி இரண்டாம் மைல் கல்லுக்கு தூரத்திற்கான வேலைகள் செய்வதற்கான நடவடிக்கைகள் எதுவும் எடுக்கப்படவில்லை.

அத்துடன் கொக்கிளாயில்

(6ஆம் பக்கம் பார்க்க)

## வடபகுதி மேலதிக ரயில் சேவை நடத்த ரயில்வேபகுதி யோசனை

(கொழும்பு)

வடபகுதி ரயில் சேவையில் நெருக்கடிகள் ஏற்படுவதாலும், அதிக வருமானம் ரயில்வே பகுதிக்கு இந்த சேவையால் கிடைப்பதாலும் மற்றொரு ரயில் சேவையை நடாத்த ரயில்வே பகுதி ஆலோசித்து வருகிறது.

முன்னர் பகலில் இரு யாழ்தேவி ரயில் சேவையிலும், இன்ரர் சிற்றி ரயில் சேவையும் நடைபெற்று வந்தது குறிப்பிடத்தக்கது.

காங்கேசன்துறையில் இருந்து புறப்படும் ரயில்கள் யாழ்ப்பாணம் வருவதற்கு முன்னமே பயணிகள் நிறைந்து விடுகின்றனர்.

(6ஆம் பக்கம் பார்க்க)

## ஐ. நா. அபிவிருத்தி அதிகாரிகள் வடமராட்சிக்கு விஜயம்

(யாழ்ப்பாணம்)

வடபகுதிக்கு விஜயம் செய்துள்ள ஐக்கிய நாடுகள் அபிவிருத்திஅமைய கொழும்பு பிரதிநிதிகள் நேற்று பருத்தித்துறை வல்வெட்டித்துறை ஆகிய பகுதிகளில் தற்போது நிலவும் நிலைமை பற்றி நேரில்சென்று பார்வையிட்டுள்ளனர்.

அப்பகுதிகளில் கடந்த காலத்தில் இலங்கை இந்திய இராணுவங்களால் ஏற்பட்டநாசம் பற்றி இவ்வதிகாரிகளுக்கு யாழ். அரசாங்க அதிபர் திரு. அன்டன் அல்பிரட் அந்தந்தப் பிரதேசங்களில் நடந்த சம்பவங்கள் பற்றியும், அழிவுகள் பற்றியும் விளக்கமளித்துள்ளார். (லோ)

## 2 ஆம் தர அதிபர்கள் பதவி உயர்வு நேர்முகப் பரீட்சை

(கொழும்பு)

இலங்கைப் பாடசாலை அதிபர் சேவையில், இரண்டாம் தரத்திலுள்ள அதிபர்களுக்குப் பதவியுயர்வு வழங்குவதற்கான நேர்முகப் பரீட்சை தற்போது நடைபெற்று வருகிறது.

இந்த நேர்முகப்பரீட்சைக்கு சமுகம் தராத அதிபர்களுக்கு

(6 ஆம் பக்கம் பார்க்க)

## பங்களாதேசத்தில் கடும்புயல்! 70 பேர் பலி, 2,000 பேர் காயம்

(டாக்கா)

பங்களாதேசத்தில் வீசிய கடும் புயலினால் எழுபது பேர் வரை மாண்டதாகவும், இரண்டாயிரத்துக்கு மேற்பட்டோர் காயமடைந்ததாகவும், பல்லாயிரக் கணக்கானோர் வீடு வாசல்களை இழந்ததாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன.

மத்திய பங்களாதேசில் வீசிய இப்புயலினால் போக்குவரத்துக்கள், மின்சாரம் தொலைத்தொடர்புச் சேவைகள் துண்டிக்கப்பட்டன. மணிக்குத் தொண்ணூறு கிலோ மீற்றர் வேகத்தில் புயல் காற்று வீசியதாம்.

### டில்லியிலும் புயல்

இந்தியாவின் தலைநகரான டில்லியிலும் நேற்று மணிக்கு அறுபது கிலோ மீற்றர் வேகத்தில் கடுங்காற்று வீசியது, இத்துடன் கடும் மழையும் பெய்தது.

## வழியனுப்ப வருபவர்களால் புகையிரத நிலையத்தில் தொல்லை

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் புகையிரத நிலையத்தில் இரவு மெயில் ரயிலில் பயணிகளை வழியனுப்ப வருபவர்களால் பெரும் தொல்லைகள் ஏற்படுவதாக புகையிரத நிலைய அதிகாரிகள் தெரிவிக்கின்றனர்.

ஒருவரை பயணம் அனுப்ப ஐந்துக்கு மேற்பட்டவர்கள் புகையிரத மேடையில் நிற்பது மட்டுமன்றி, ரயிலில் அவருக்கு சீற்பிடிக்க கும்பலாக ஏறிவிடுகின்றனர். இதனால் ஏனைய பயணிகள் ஏறமுடியாது அவதிப்படுகின்றனர்.

சிலர் புகையிரத மேடைச் சீட்டுக்கள் இன்றி நடமாடுகின்றனர். வேறு சிலர் புகையிரதப்பகுதி ஊழியர்கள் பார்சல்களை ஏற்றுவதற்கும் தடையாகவுள்ளனர்,

அண்மைக் காலங்களில் இங்கு சைக்கிள் களவுகள் இடம்பெற்று தற்போது 'சோல்ற்' அமைப்பு அதன் பாதுகாப்பை மேற்கொள்கின்றது.

இதேபோல புகையிரத நிலையத்திற்கு கண்டபடி வருபவர்களை தடுத்து பயணிகளும் ஊழியர்களும் தமது கருமங்களை மேற்கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும் என புகையிரதப்பகுதி உயர் அதிகாரி ஈழநாதத்துக்கு தெரிவித்தார்.

### மின்சார ஊழியர்கள் அசமந்த போக்கு

(புங்குடுதீவு)

புங்குடுதீவில் பல வீடுகளில் ஏற்படும் மின் கோளாறுகளை சீர் திருத்துமாறு அங்கு வரும் மின்சாரசபை ஊழியர்களிடம் கூறினால் அவர்கள் பின்பு வருவதாகக் கூறிச் சென்று விடுகின்றனராம்.

பின்னர் நீண்ட காலமாகியும் அவர்களைக் காணமுடியாமலும், கோளாறுகளை சீர் செய்ய முடியாமலும் இருப்பதாக இப்பகுதி மக்கள் கவலை தெரிவிக்கின்றார்கள். (22)

## 2,000 தொண்டர் படையினர் 700 எஸ் 84 துப்பாக்கியுடன் மறைவு

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுக்குள் வடக்கு-கிழக்கு மாகாணங்கள் வந்ததும், மக்கள் தொண்டர் படையைச் சேர்ந்த 2,000 பேர் இலங்கை அரசாங்கத்தால் வழங்கப்பட்ட எஸ் 84 ரகத்தைச் சேர்ந்த 700 துப்பாக்கிகளுடன் ஓடி மறைந்துவிட்டார்கள் எனப் பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

தற்காலிகமாக இணைக்கப்பட்ட வடக்கு-கிழக்கு மாகாணங்களில் இலங்கைப் பொலிசுடன் சேர்ந்து சட்டத்தையும் ஒழுங்கையும் நிலைநாட்ட தொண்டர் படைக்கு ஆள் சேர்க்கப்பட்டு, அவர்களுக்கு

(6 ஆம் பக்கம் பார்க்க)

**வரிவிளம்பரம்**

**விற்பனைக்கு**

சீயாக்காய், பயறு, அரிசி வெந்தயம் ஆகிய நான்கு வகைப் பொருட்கள் அடங்கிய சீயாக்காய் பவுடர் எங்களிடம் மொத்தமாகவும், சில்லறையாகவும் பெற்றுக் கொள்ளலாம் MGM. NO. 777 K. K. S. ROAD, JAFFNA.

(B/ 764)

**கல்வி**

பாலராசிரியர் சங்கம் நடாத்தும் பாலராசியர் பயிற்சி நெறி 1990க்கு க. பொ. த. (சா/த) சித்தியடைந்த பெண்கள் விண்ணப்பிக்கலாம்நேரில்வரமுடியாதோர் தபால் வழியிலும் பயிலலாம் பாலர் ஆசிரியர்சங்கம் மே/பா உயர்கலைக் கல்லூரிஆனைப் பந்தி, யாழ்ப்பாணம்.

(R 426)

யாழ் நகரில் சகலவிதமான மணிக்கூடுகளையும் உத்தரவாதத்துடன் திருத்திக் கொள்ள DILKA WATCH WORKS, Opposite Bus Stand, Jaffna (குறிப்பு) சகல 'சீக்கோ' சிற்றிசன் உதிரிப்பாகங்களும் கையிருப்பில் உண்டு.

(B-537)


அரச ஊழியர்களுக்கு

# தோலைபேசி பாவனைக்கு பத்துவீத கட்டணம் தேவை

(மட்டக்களப்பு)

உத்தியோகபூர்வ தொலைபேசி பாவனைக்கு அனுமதி பெற்றுள்ள உத்தியோகத்தர் ஒருவர் மாதாந்தம் தொலைபேசிக் கட்டணம் 10 வீதம் செலுத்த வேண்டும்.

மேற்கண்டவாறு பொது. நிர்வாகம், மாகாண சபை உள்நாட்டு அலுவல்கள் அமைச்சு செயலாளர் திரு. என். பீ. எம். பெர்னான்டோ சகலஅமைச்சுசெயலாளர்கள், மாகாண சபைத் தலைமைச் செயலாளர்கள், ஆளுநர் செயலாளர்கள், திணைக்கள, கூட்டுத்தாபன சபைத் தலைவர்களுக்கு அனுப்பி வைத்துள்ள சுற்றறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

எல்லை மீறித் தொலைபேசி தமது சொந்த பாவனைக்குள்ளாவதைத் தடுப்பதற்காகவே இத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது,

இவ்வருடம் ஜனவரி 1 ஆம் திகதி முதல் அமுலுக்கு வருகின்றது எனவும் அவர் தெரிவித்துள்ளார். (37)

## அன்னையர் முன்னணி அன்பளிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ். அன்னையர் முன்னணியினர் அன்னைபூபதிநினைவாக இரண்டாயிரம் ரூபாவை மதிய உணவுக்காக கைதடி நவீல்ட் பாடசாலைக்கு அன்பளிப்பாக வழங்குகிறார்கள்.

# இலங்கைவங்கியின்கடன்உதவி பருத்தித்துறையில் ஆரம்பம்

(பருத்தித்துறை)

இலங்கை வங்கி பருத்தித்துறைக் கிளை கிராமப்புற வறுமை ஒழிப்புத் திட்டத்தின் கீழ் சுயதொழில் உற்பத்திக் கடனாக நாற்பதாயிரம் ரூபாவை கடந்த வெள்ளிக்கிழமை வழங்கியுள்ளது.

திரு. அருணாசலம் தர்மலிங்கத்திற்கு இத் திட்டத்தின் கீழ் பத்தாயிரம் ரூபாவையும், திரு. சுந்தரமூர்த்தி இராமகிருஸ்ணனுக்கு இருபத்தையாயிரம் ரூபாவையும் வறுமை ஒழிப்புத் திட்டத்தின் கீழ் சுயதொழில் உற்பத்திக் கடனாக வழங்கியுள்ளது.

இதற்கான காசோலைகள் பருத்தித்துறை இலங்கை வங்கி முகாமையாளர் திரு. எஸ். மகாலிங்கத்தால் வைபவரீதியாகக் கையளிக்கப்பட்டது, (22)

## 42-ஆவது ஆண்டுவிழா

(கரவெட்டி)

வதிரி டையமன்ஸ் விளையாட்டுக்கழகம், வதிரி தமிழ் மன்றம் ஆகியவற்றின் 42வது ஆண்டு நிறைவு விழாவும் வருடாந்த பொதுக்கூட்டமும் அண்மையில் நடைபெற்றது.

வதிரி தமிழ் மன்ற மண்டபத்தில் நடைபெற்ற மேற்படி வைபவத்திற்கு திரு. சி. க. இராசேந்திரன் தலைமை வகித்தார்.

## கட்டாக்காலி கால்நடைகள்

(புங்குடுதீவு)

புங்குடுதீவு பகுதியில் கட்டாக்காலி கால்நடைகளின் தொல்லைகள் அதிகரித்துள்ளன.

இரவு நேரங்களில் இவை நடுவீதிகளில் படுத்திருப்பதால் இருட்டில் செல்லும் பொதுமக்களும் சைக்கிள்கள் இவற்றுடன் மோதவேண்டிய நிலை ஏற்படுகிறது. (22)

# நோயாளருக்குரிய தொண்டு ஒரு மகத்தான தொண்டு

(சாவகச்சேரி)

நோயாளருக்குச் சேவை செய்யும் ஒரு புனித தொண்டிற்காக இன்று நீங்கள் உங்களை அர்ப்பணித்துக் கொண்டீர்கள். உங்கள் தொண்டும், சேவையும் நன்கு சிறக்க வேண்டும்.

சுகாதாரப் பயிற்சி பெற்று கிராமிய சுகாதார உதவியாளர்களாக 65 பேரும், சுகாதாரத் தரிசிப்பாளர்களாக 26 பேரும் நியமனங்களைப் பெற்று வெளியேறும்போது நடைபெற்ற பிரியாவிடை வைபவத்தில் டாக்டர் தெய்வேந்திரம் அவர்கள் மேற்கண்டவாறு ஆசி கூறினார்.

தெல்லிப்பளை சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையில் இந்த வைபவம் இடம்பெற்றது,

மேற்படி பயிற்சிகள் 3 மாத காலம் அங்கு நடைபெற்று பூர்த்தியடைந்தன.

கிளிநொச்சி, வவுனியா, முல்லைத்தீவு, மன்னார், அம்பாறை. மட்டக்களப்பு, திருக்கோணமலைஆகிய மாவட்டங்களுக்கும் இவர்கள் சேவைக்காகச் செல்கிறார்கள்.

இந்த வைபவத்தின்போது வடக்கு, கிழக்கு சுகாதார அமைச்சின் செயலாளர் டாக்டர் எஸ். இரத்தினசபாபதி, சுகாதாரப் பணிப்பாளர்டாக்டர் ப. கனகசபை. தாய்சேய் வைத்திய அதிகாரி டாக்டர் திருமதி பொன்னம்பலம், தொற்றுநோய் தடுப்பு வைத்திய அதிகாரி டாக்டர் சிவபாதம் உட்பட சுகாதார வைத்திய அதிகாரிகள், சிறுவர் பராமரிப்பு நிதிய அதிகாரிகள். சுகாதாரப் பரிசோதகர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

டாக்டர் தெய்வேந்திரம் மேலும் அங்கு பேசுகையில், நோயாளர் தொண்டு என்பது ஒரு மகத்தான தொண்டு என்பதை நீங்கள் மறந்துவிடக்கூடாது.

நோயாளர் தொண்டில் ஈடுபடுபவர்களுக்கு கருணை உள்ளம், தொண்டு மனப்பான்மை. சாந்தம், பொறுமை, சகிப்புத்தன்மை ஆகிய சிறப்பு அம்சங்கள் அத்தியாவசியமானவை என்றார். (35)


**யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்**

பின்வரும் பதவிகளுக்கு பொருத்தமான அபேட்சகர் களிடமிருந்து விண்ணப்பங்கள் என்னால் பெற்றுக் கொள்ளப்படும்.

1. மருத்துவப் பேராசிரியர்
2. உடலமைப்பியல் பேராசிரியர்
3. மனநோயியல் பேராசிரியர்
4. அங்கக் கோணல் அறுவை மருத்துவஅறக் கொடைத்தவிசு
5. கழலையியலில் அறக் கொடைத்தவிசு
6. நோயியல்/ ஒட்டுண்ணியியல்/ நுண்ணுயிரியல்/ உடற்றொழிலியல்/ மகப்பேற்றியலும் மாதர் நோயியலும்/ குழந்தை மருத்துவம்/ அறுவை மருத்துவம்/ சமூக மருத்துவம்/ சட்ட மருத்துவம்/ மருந்தியல்- விரிவுரையாளர்/ சிரேஷ்ட விரிவுரையாளர் தரம்11
7. உடற்றொழிலியலில் உதவி விரிவுரையாளர்/ தற்காலிக உதவி விரிவுரையாளர்
8. உடலமைப்பியலில்/ அறுவை மருத்துவத்தில் தற்காலிக விரிவுரையாளர்

**சம்பள அளவுத்திட்டம்**

1. பேராசிரியர்தரம் 11: ரூபா 12, 200- 6 x 300 - 14, 000/- மாதமொன்றுக்கு
2. சிரேஷ்ட விரிவுரையாளர் தரம் 11: ரூபா, 6000 -5 x250 - 9, 250/- மாதமொன்றுக்கு
3. விரிவுரையாளர் (மருத்துவம்) : ரூபா 4, 500 -10x200- 6,500/- மாதமொன்றுக்கு (மருத்துவ பீடத்தின் விரிவுரையாளர் ஒருவர் முதல் நியமனத்தின் போது மேற்குறித்த சம்பள அளவுத் திட்டத்தில் 4500/- ரூபாவுக்கு மேலதிகமாக இரண்டு படியில் அதாவது ரூபா 4, 900/- இல் வைக்கப்படுதல் வேண்டும்)
4. உதவி விரிவுரையாளர்: ரூபா 3, 900/- மாதமொன்றுக்கு (நிலையானது) ஓராண்டு காலத்திற்கு.

பேராசிரியர்களுக்கும்



**யாழ்நகரில் இன்றைய சினிமா**

**வின்ஸர்-யாழ்**
தினசரி 4-00, 6-45, 9-45
சனி ஞாயிறு விடுமுறை நாட்களில்
10·30, 2.30, 6.30
பாக்கியராஜ் சோபனா
**இது நம்ம ஆளு**
(புதிய வெளியீடு)

**நியூ சாந்தி (யாழ்)**
தினசரி 4 00, 6.45, 9.30
ஜெயசங்கர், முத்துராமன் லட்சுமி, நாகேஸ் நடித்த
**கண்ணன் வருவான்**
(புதிய பிரதி)

7 வது வாரம்
**மனோகரா - (யாழ்)**
தினசரி 10.30, 2.30, 6.30
ரஜனி, ரூபினி. நடித்த
**மனிதன்**
(கலர்)

**ராஜா (யாழ்)**
10. 30, 2. 30, 6. 30
ரஜனி (இரு வேடம்)
ராதா, நதியா
105 நாள் வெற்றிநடை போடுகிறது
**ராஜாதி ராஜா**
(கலர்)


வடபிராந்திய போக்குவரத்துச் சபை

# பாதுகாப்புசேவை ஊழியருக்கு இலவச பயணச் சீட்டு ரத்து

(கோண்டாவில்)

வடபிராந்திய போக்குவரத்து சபையில் கடமையாற்றிவரும் பாதுகாப்பு சேவை ஊழியர்களுக்குஇதுநாள்வரை வழங்கப்பட்டு வந்த இலவச பயணச் சீட்டுக்கள் யாவும் இம்மாதத்துடன்நிறுத்தப்படவுள்ளது.

மேற்படி ஊழியர்கள் தனியார் பாதுகாப்பு சேவைக்கு உட்பட்டவர்கள் என்ற காரணத்தினாலேயே இந்த இலவச பயணச்சீட்டு நிறுத்தம் மேற்கொள்ளப்படவுள்ளதாக தெரிவிக்கின்றது.

தனியார் பாதுகாப்பு சேவைப் பகுதிக்கு ஒரு ஊழியருக்கு 42.50வீதம்நாளொன்றுக்கு சபையினால் வழங்கப்பட்ட போதும் இத்தனியார் பகுதியினர் ஊழியர்களுக்கு சேவைக்கால அடிப்படையில் நாளொன்றுக்கு முப்பத்து மூன்று ரூபாய் வரையிலான சம்பளத்தையே வழங்கி வருவதும் குறிப்பிடத்தக்கது.

தூர இடங்களிலிருந்து தொழிலுக்கு வரும் இந்த பாதுகாப்பு ஊழியர்கள் தமது இலவச பயணச்சீட்டு மறுக்கப்படவுள்ளமை குறித்து பெரிதும் அதிருப்தி அடைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (34)

# ஓய்வான நேரங்களை பெண்கள் வீணாக்க கூடாது

(கொழும்புத்துறை)

"இன்றைய சூழ்நிலையில் கைத்தொழில்களில் நாம் ஊக்கம் செலுத்த வேண்டும். செஞ்சிலுவைச் சங்கம் வாழை நாரில் உற்பத்திசெய்யப்பட்ட பொருட்களைக் கொள்வனவு செய்து சந்தைப்படுத்துவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளும்"

இவ்வாறு யாழ். மாவட்ட செஞ்சிலுவைச்சங்க செயலாளர் திரு. கணேசலிங்கம் சுன்னாகம் மயிலணியில் வாழைநார்ப் பயிற்சி நெறியைப் பூர்த்தி செய்த யுவதிகளுக்குச் சான்றிதழ் வழங்கும் வைபவத்தில் பேசுகையில் குறிப்பிட்டார்.

அவர் மேலும் பேசுகையில் படித்து விட்டு வேலை இல்லாதிருக்கும் பெண்கள் தமது நேரத்தை வீணாக்காமல் உற்பத்திப் பயிற்சிகளில் பங்குபற்றி முன்னேற்றமடைவதுடன் தமது கிராமத்தைபொருளாதார ரீதியில் மேம்பாடு அடையச் செய்ய வேண்டும்

## 10ஆவது ஆண்டு விழா

(வந்தாறுமூலை)

வந்தாறுமூலை டைமன்ஸ் விளையாட்டுக் கழகத்தின் பத்தாவது வருடாந்த விளையாட்டு விழா வந்தாறுமூலை ஸ்ரீ மகாவிஷ்ணு வித்தியாலய மைதானத்தில் மிகவும் சிறப்பாக நடைபெற்றது.

இவ்விளையாட்டுப் போட்டிக்கு விடுதலைப் புலிகளின் மக்கள் முன்னணி ஏறாவூர் பற்று பிரதேச அமைப்பாளர் அலெக்ஸ்சாந்தர், வந்தாறுமூலை பிரதேசப் பொறுப்பாளர் பிரசன்னா ஆகியோர் கலந்து கொண்டார்.

சிறுவர்களுக்கான மிட்டாய்

## உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டி

(கரவெட்டி)

பருத்தித்துறை மாவட்ட உதைபந்தாட்ட லீக் அமரர் வி. வேலுப்பிள்ளை ஞாபகார்த்த உதைபந்தாட்ட சுற்றுப் போட்டியை நடாத்தி வருகின்றது.

நெல்லியடி மத்திய மகா வித்தியாலயத்தில் நடைபெறும் மேற்படி போட்டியில் பருத்தித்துறை மாவட்ட உதைபந்தாட்ட லீக்கில் அங்கம் வகிக்கும் பல முன்னணி விளையாட்டுக் கழகங்களும் பங்குகொள்கின்றன. இறுதிப் போட்டி எதிர்வரும் 5-5-90 அன்று நடைபெறுமென மேற்படி லீக்கின் செயலாளர் திரு. சி. க. இராசரத்தினம்

## ஆண்டு விழா

(ஈச்சமோட்டை)

# செட்டிகுளம் பகுதியில்

...வரத்து சபையில் கடமையாற்றி வரும் பாதுகாப்பு சேவை ஊழியர்களுக்கு இதுநாள்வரை வழங்கப்பட்டு வந்த இலவச பயணச் சீட்டுக்கள் யாவும் இம்மாதத்துடன் நிறுத்தப்படவுள்ளது.

மேற்படி ஊழியர்கள் தனியார் பாதுகாப்பு சேவைக்கு உட்பட்டவர்கள் என்ற காரணத்தினாலேயே இந்த இலவச பயணச்சீட்டு நிறுத்தம் மேற்கொள்ளப்படவுள்ளதாக தெரிவிக்கின்றது.

தனியார் பாதுகாப்பு சேவைப் பகுதிக்கு ஒரு ஊழி...டுக்கு சம்பளமாக வழங்கப் பட்ட போதும் இத்தனியார் பகுதியினர் ஊழியர்களுக்கு சேவைக்கால அடிப்படையில் நாளொன்றுக்கு முப்பத்து மூன்று ரூபாய் வரையிலான சம்பளத்தையே வழங்கி வருவதும் குறிப்பிடத்தக்கது.

தூர இடங்களிலிருந்து தொழிலுக்கு வரும் இந்த பாதுகாப்பு ஊழியர்கள் தமது இலவச பயணச்சீட்டு மறுக்கப் படவுள்ளமை குறித்து பெரிதும் அதிருப்தி அடைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (34)

## ஓய்வான நேரங்களை பெண்கள் வீணாக்க கூடாது

(கொழும்புத்துறை)

''இன்றைய சூழ்நிலையில் கைத்தொழில்களில் நாம் ஊக்கம் செலுத்த வேண்டும். செஞ்சிலுவைச் சங்கம் வாழை நாரில் உற்பத்திசெய்யப்பட்ட பொருட்களைக் கொள்வனவு செய்து சந்தைப்படுத்துவதற்கான நடவடிக்கைகளை மேற் கொள்ளும்''

இவ்வாறு யாழ். மாவட்ட செஞ்சிலுவைச்சங்க செயலாளர் திரு. கனேலிங்கம் சுன்னாகம் மயிலணியில் வாழை நார்ப் பயிற்சி நெறியைப் பூர்த்தி செய்த யுவதிகளுக்குச் சான்றிதழ் வழங்கும் வைபவத்தில் பேசுகையில் குறிப்பிட்டார்.

அவர் மேலும் பேசுகையில் படித்து விட்டு வேலை இல்லாதிருக்கும் பெண்கள் தமது நேரத்தை வீணாக்காமல் உற்பத்திப் பயிற்சிகளில் பங்குபற்றி முன்னேற்றமடைவதுடன் தமது கிராமத்தைபொருளாதார ரீதியில் மேம்பாடு அடையச் செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொண்டார்.

வாழை நார்ப் பயிற்சி நெறியைப் பூர்த்தி செய்த யுவதிகளுக்குச் செஞ்சிலுவைச் சங்க டாக்டர் தெய்வேந்திரம்சான்றிதழ்களையும் ஊக்குவிப்புப் பணத்தையும் வழங்கினார்.

இவ்வைபவம் சுன்னாகம் மயிலணி வடக்கு சனசமூக நிலைய மண்டபத்தில் சன சமூகத் தலைவர் திரு. வே. தம்பிரத்தினம் தலைமையில் நடைபெற்றது. முன்னாள் செயலாளர் திரு. சி. தர்மலிங்கம் நன்றியுரை கூறினார். (24)

## ...ஆவது ஆண்டு விழா

(வந்தாறுமூலை)

வந்தாறுமூலை டைமன்ஸ் விளையாட்டுக் கழகத்தின் பத்தாவது வருடாந்த விளையாட்டு விழா வந்தாறுமூலை ஸ்ரீ மகாவிஷ்ணு வித்தியாலய மைதானத்தில் மிகவும் சிறப்பாக நடைபெற்றது.

இவ்விளையாட்டுப் போட்டிக்கு விடுதலைப் புலிகளின் மக்கள் முன்னணி ஏறாவூர் பற்று பிரதேச அமைப்பாளர் அலெக்ஸ்சாந்தர், வந்தாறு மூலை பிரதேசப் பொறுப்பாளர் பிரசன்னா ஆகியோர் கலந்து கொண்டார்.

சிறுவர்களுக்கான மிட்டாய் ஓட்டம், சாக்கோட்டம், வேகநடை, 60 வயதுக்கு மேற்பட்ட ஆண்கள், தலையணைச்சமர், வினோத உடைப்போட்டி, கயிறு இழுத்தல், மெழுகுவர்த்தி தீப நிகழ்ச்சி இன்னும் பல நிகழ்ச்சிகளும் நடைபெற்றன.

காலை நிகழ்ச்சியாக ஐந்து மைல் மரதன்ஓட்டம் இடம் பெற்றது. நிகழ்ச்சி முடிவில் வெற்றிபெற்றவர்களுக்கு மக்கள் முன்னணிபிரதேச அமைப்பாளர் அலெக்ஸ்சாந்தர் அவர்கள் பரிசில்கள்வழங்கி கௌரவித்தார். (29)

மாதமொன்றுக்கு

3. விரிவுரையாளர் (மருத்துவம்) : ரூபா 4,500 -10x200- 6,500/- மாதமொன்றுக்கு

(மருத்துவ பீடத்தின் விரிவுரையாளர் ஒருவர் முதல் நியமனத்தின் போது மேற்குறித்த சம்பள அளவுத் திட்டத்தில் 4500/- ரூபாவுக்கு மேலதிகமாக இரண்டு படியில் அதாவது ரூபா 4,900/- இல் வைக்கப்படுதல் வேண்டும்)

4. உதவி விரிவுரையாளர்: ரூபா 3,900/- மாதமொன்றுக்கு (நிலையானது) ஓராண்டு காலத்திற்கு.

பேராசிரியர்களுக்கும் அறக் கொடைத் தவிசுக்ளுக்கும் விண்ணப்ப முடிவுத்தேதி 1990.07.16 ஆகும். ஏனைய பதவுகளுக்கு 1990.05.16 ஆகும்.

விண்ணப்பங்கள் இப் பல்கலைக் கழகத்தின் தாபனக் கிளையின் சிரேஷ்ட உதவிப்பதிவாளரிடமிருந்துபெறக்கூடிய படிவங்களில் செய்யப் படுதல் வேண்டும். பேராசிரியர். அறக் கொடைத் தவிசுப் பதவிகளுக்கு விண்ணப்படிவங்களுக்கான வேண்டுகோளுடன் சுய முகவரியிட்டு ரூபா 2/- முத்திரை ஒட்டப் பட்ட 23x10 சதம மீற்றர் அளவுடைய கடித உறையும் ஏனைய பதவிகளுக்கு சுய முகவரியிட்டு முத்திரை ஒட்டப்பட்ட 23x10 சதம மீற்றர்அளவுடைய கடித உறையும் இணைத்து அனுப்பப்பட வேண்டும்.

அரசாங்கத் திணைக்களங்கள், அரச கூட்டுத் தாபனங்கள்,நியதிச்சட்ட சபைகள் ஆகியவற்றின் விண்ணப்பதாரிகள் அந் நிறுவனங்களின் தலைவர்கள் மூலம் விண்ணப் பித்தல் வேண்டும். ஒன்றுக்கு மேற்பட்ட பதவிகளுக்கு விண்ணப்பிக்க விரும்புவோர் தனித்தனி விண்ணப்பங்கள் அனுப் புதல் வேண்டும்.

தெரிவு செய்யப்பட்ட அபேட்சகர்களின்சிறப்புத் தகைமைகளையும்/ அல்லது அனுபவத்தையும் கவனத்திற் கொண்டு சம்பள அளவுத்திட்டத்தின் பொருத்தமான படியில் வைக்கப்படுவர்.

குறிப்பு: அறக்கொடைத் தவிசு பதவிகளுக்கும் பேராசிரியர் பதவிகளுக்கும் ஒப்பந்த அடிப்படையிலான நியமனமும் கவனிக்கப்படும்.

— பதிவாளர்

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்,
திருநெல்வேலி,
யாழ்ப்பாணம்.
1990. 04. 11

B/180

## சுற்றுப்போட்டி

(கரவெட்டி)

பருத்தித்துறை மாவட்ட உதைபந்தாட்ட லீக் அமரர் வி. வேலுப்பிள்ளை ஞாபகார்த்த உதைபந்தாட்ட சுற்றுப் போட்டியை நடாத்தி வருகின்றது.

நெல்லியடி மத்திய மகா வித்தியாலயத்தில் நடைபெறும் மேற்படி போட்டியில் பருத்தித்துறை மாவட்ட உதைபந்தாட்ட லீக்கில் அங்கம் வகிக்கும் பல முன்னணி விளையாட்டுக் கழகங்களும் பங்குகொள்கின்றன. இறுதிப் போட்டி எதிர்வரும் 5-5-90 அன்று நடைபெறுமென மேற் படி லீக்கின் செயலாளர் திரு. சி. க. இராசரத்தினம் தெரிவித்துள்ளார். (18)

## இசை அரங்கு

தேனிசை செல்லப்பாவின் தித்திக்கும் தீந்தமிழ் இசை நிகழ்ச்சி 26ஆம் திகதி மன்னார் நகரிலும். 27ஆம் திகதி விடத்தற்தீவிலும் நடைபெற ஏற்பாடாகியுள்ளது. விடுதலைப் புலிகளின் மன்னார் மாவட்டப் பிரிவினரின் ஆதரவில் இந்நிகழ்ச்சிகள் இடம் பெறவிருக்கின்றன. (60)

## ஆண்டு விழா

(ஈச்சமோட்டை)

கொழும்புத்துறை வளன்புரம் ஐக்கிய சனசமூக நிலையத்தின் ஓராண்டு நிறைவையொட்டி எதிர்வரும் 29ஆம் திகதி சிறுவர்களின் கலை நிகழ்ச்சியொன்று நடைபெறவுள்ளது.

இவ்விழாவிற்கு பிரதம விருந்தினராக யாழ். மாநகர சபை ஆணையாளர் பொ. பாலசிங்கம் கலந்து கொண்டு சிறப்பிக்கவுள்ளனர். (43)

## செட்டிகுளம் பகுதியில் தேய்ந்த தராசு படிகள்

(கொழும்புத்துறை)

நிறுவைகள், அளவைகள் திணைக்களம் செட்டிகுளம் உதவி அரசாங்க அதிபர் பிரிவில் சகல வியாபாரிகளின் அளவைகள், நிறுவைகள், கருவிகளுக்கு இம்மாதம் 24-ம் திகதி செவ்வாய்க் கிழமையும் 25-ம் திகதி புதன்கிழமையும் முத்திரையிடும் (சீல்) வேலைகள் நடைபெறவுள்ளன.

வவுனியா மாவட்ட அளவைகள், நிறுவைகள்,திணைக்களப் பரிசோதகர் திரு வை. கிருஸ்ணதாசன் இவ்வாறு அறிவித்துள்ளாா.

செட்டிக்குளம் உதவி அரசாங்க அதிபர் பணிமனையில் அப்பகுதி வர்த்தகர்கள் வியாபாரிகள் விறகுகாலை உரிமையாளர்கள் அனைவரும் தத்தமது நிறுவைகள், அளவைகள் (தராசு,படி, லீற்றர், மீற்றர் அளவைகள், மேடைத் தராசு, தூக்குத் தராசுகள்) கருவிகளுடன் தவறாது சமுகமளிக்க வேண்டுமென்று கோரப்பட்டுள்ளது.

முத்திரையிடத் தவறுபவர்கள் மீது கடும் சட்டநடவடிக்கைகள் எடுக்கப்படவுள்ளதாகவும் தெரிவித்துள்ளார்.

கிராமப் புறங்களில் கூடுதலாக முத்திரையிடப்படாத தேய்ந்த தராசுகளையும் படிகளையும் பெரும்பாலான வியாபாரிகள் பாவித்து வருவதாகப் பொதுமக்கள் தங்கள் திணைக்களத்துக்கு புகார் தெரிவித்துள்ளதாகவும் அவர் தெரிவித்தார். (24)

## 90ஆம் நாள் நினைவஞ்சலி

பிறப்பு:
19-06-1965



இறப்பு:
20-01-1990

சண்முகம் ஜீவமணி

இடு காடுகளின் புதைகுழிகளிலிருந்தும்
மயானத்து அக்கினியிலிருந்தும்
எம் மக்கள் மீளப்போவது
எப்போது—?

இடிக்கப்பட்ட நினைவுச் சின்னங்களை
மூடிப் படர்ந்த அறுகு
எம் மனங்களையும்
மேவியதேன்?

தாய், சகோதர சகோதரிகள்
மண்டைதீவு. மைத்துனர், மைத்துனிமார்

## உலக வங்கி அதிகாரிகள் நேரில் சென்று அவதானிப்பு

(முல்லைத்தீவு)

வவனிக்குளம் நீர்ப்பாசன வேலைகளை உலகவங்கி அதிகாரிகளும், புனர்வாழ்வு புனர்நிர்மாண அமைச்சு அதிகாரிகளும் நேரில் சென்று பார்வையிட்டனர்.

இந்த வேலைகள் திருப்திகரமான முறையில் நடைபெறுவதாக இவர்கள் நம்பிக்கை தெரிவித்தனர்.

இவ்வாண்டுக்குரிய உதவியில் மேலும் அதிக நிதி ஒதுக்கீடு செய்து தரப்படும் எனவும் இங்கு தெரிவிக்கப்பட்டது.

## நாலாயிரம் கன்றுகள் தருவிப்பு
## தென்னைச் செய்கையை ஊக்குவிக்க நடவடிக்கை

(கொழும்புத்துறை)

யாழ். மாவட்டத்தில் தென்னைச் செய்கையை ஊக்குவிக்குமுகமாக கமநலச்சேவை நிலையங்கள் மூலம் தென்னங் கன்றுகள் விநியோகிக்கப்படவுள்ளன.

இதற்கென லுணுவிலவிலிருந்து நான்காயிரம் தென்னங் கன்றுகள் தருவிக்கப்படும். ஏற்கனவே மூன்றுவகையான தென்னம் நாற்றுகள் யாழ். மாவட்ட கமநலச்சேவை நிலையங்கள் மூலம் விநியோகிக்கப்பட்டுள்ளதும் குறிப்பிடத்தக்கது.

இதேவேளை மாமரங்களை தாக்கும் பூச்சிகளை அழிப்பதற்கு மருந்துதெளிக்க நவீன கருவிகள் ஜப்பானிலிருந்து தருவிக்கப்பட்டுள்ளன.

இவை யாழ். மாவட்டத்தில் உள்ள நல்லூர், உடுவில், சாவகச்சேரி ஆகிய கமநலச்சேவை நிலையங்களுக்கு கமநலச் சேவைகள் திணைக்களத்தால் வழங்கப்பட்டுள்ளன.

பொதுமக்கள் இந்த கருவிகளை வாடகைக்குப் பெற்றுப் பயன்படுத்திக் கொள்ளலாம் என யாழ். மாவட்ட கமநலச் சேவை திணைக்கள ஆணையாளர் தெரிவித்துள்ளார். (24

## உல்லாசப் பயணத்துறை மீண்டும் வளர்ச்சி பெறுகிறது

கடந்த ஏழு ஆண்டுகளை விட உல்லாசப் பயணத்துறை வளர்ச்சியடைந்துள்ளதாக உல்லாசப் பிரயாண கிராமியத் தொழில் அபிவிருத்தி அமைச்சு தெரிவித்துள்ளது.

கடந்த மூன்று மாதங்களில் மட்டும் எண்பதாயிரம் உல்லாசப் பயணிகள் இங்கு வந்துள்ளனர்.

சென்ற வருடம் இதேகாலப் பகுதியில் இங்கு வந்த உல்லாசப் பயணிகளின் தொகையில் இது நூறு சதவீதம் அதிகரித்துள்ளதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

## கப்பூது மக்கள் மின்சாரம் குடிநீர் இன்றி அவதி

(கரவெட்டி)

கப்பூது மக்கள் குடிநீர் மின்சார வசதிகள்இல்லாமையால் வெகுவாகப் பாதிக்கப்பட்டு வருவதாகப் புகார் செய்துள்ளனர்.

தமது பகுதியில் ஒரு நன்னீர் கிணறுகூட இல்லாமையால் தாம் தினமும் விராலிமடத்தடியிலுள்ள கிணற்றுக்குச் செல்ல வேண்டிய துர்ப்பாக்கிய நிலை ஏற்பட்டுள்ளதாகவும் கூறப்படுகிறது. இவ்விடயத்தில் எங்கள்மீது கருணை கூர்ந்து தக்க நடவடிக்கையெடுக்க வேண்டுமெனக் கோரிக்கை விடுத்துள்ளனர். (18)

# சோவியத்துடன் பேச்சுவார்த்தை மூலம் பிரச்சினையைத் தீர்க்க லித்வேனியா விருப்பம்

(வில்லியஸ்)

சோவியத் அரசுடன் பேச்சு வார்த்தைமூலம் தீர்வுகாண விரும்புவதாக லித்வேனிய ஜனாதிபதி லயன்ஸ் பேகஸ் தெரிவித்துள்ளார். இது சம்பந்தமாக அவர் சோவியத் தலைவர் கொர்பசேவிற்கு கடிதம் ஒன்றையும் அனுப்பி வைத்துள்ளார்.

சோவியத் அரசினால் மேற்கொள்ளப்பட்ட எரிபொருள் மற்றும் பொருட்களுக்கான தடை ஏற்பட்டதன் பின் கொர்பசேவுக்கு எழுதிய முதலாவது கடிதம் இதுவாகும்.

மேலும்கடந்த சனிக்கிழமை வில்லியஸ் நகரத்தில் உள்ள அச்சுக்கூடத்திற்குள் சோவியத் இராணுவம் புகுந்து ஆக்கிரமித்துக் கொண்டதையும் இதனால் பலமக்கள் காயமடைந்ததையும் அக்கடிதத்தில் குறிப்பிட்டார்.

இதேவேளை கடந்த சனிக்கிழமை அன்று லித்வேனியப் பாராளுமன்றத்தில் லயன்ஸ் பேகஸின் ஆதரவாளர்கள் சோவியத்அரசு மேற்கொண்டு வரும் பொருளாதாரத்தடை பற்றி எடுத்துக் கூறினார்கள்.

எரிபொருள் தடை, உணவுத்தடை என்று பாதிப்புகள் தொடர்ந்து கொண்டே போகிறது என அவர்கள் குறிப்பிட்டார்கள். கியூபாவில் இருந்து லித்வேனியாவிற்கு வந்த சீனிக்கப்பல் சோவியத் அரசால் திசை திருப்பி அனுப்பப்பட்டது என்றும் மீனை ஏற்றிவந்த கப்பல வேறு குடியரசுக்கு அனுப்பப்பட்டதாகவும் இவர்கள் கூறினார்கள்.

அத்துடன் தந்திக் கம்பிகள், பிளாஸ்டிக் பொருள்கள், உலோகங்கள் லித்வேனியாவிற்குள் எடுத்துவர முடியாதவாறு சோவியத் அரசினால் தடைசெய்யப்பட்டுள்ளது. பெருமளவு ஆலைகள் எரிபொருள் தடையினால் பாதிப்படைந்திருக்கின்றன.

சோவியத் அரசின் இந்நடவடிக்கையைக் கண்டித்து அமெரிக்க ஜனாபதி ஜோர்ஜ் புஷ் புளோரிடாவில் இருந்து செய்தி அனுப்பியிருக்கிறார்.

இதுவரை தமது அரசு நிலைமையை அவதானித்துக் கொண்டு இருந்ததாகவும், இனிமேல் நடவடிக்கையை மேற்கொள்ளும் என்றும்அவர் தெரிவித்தார்.

## மட்டுநகரில் வீதிஒழுங்கில் பொலிசார்

(கோட்டைக்கல்லாறு)

மட்டக்களப்பு நகரப் பகுதிகளில் பொலிசார் மீண்டும் வீதிப் போக்குவரத்து கடமைகளைச் செய்யத் தொடங்கியுள்ளனர்.

கடந்த வாரம் பொலிசார் பொது மக்களுடன் செய்த சேட்டை காரணமாக விடுதலைப்புலிகள் சில நடவடிக்கைகளை எடுத்ததினால் பொலிசாரின் நடமாட்டம் கட்டுப்படுத்தப்பட்டது குறிப்பிடத்தக்கது.

மேலும் மட்டக்களப்பில் ரிசேவ் பொலிசாருக்கான நேர்முகப்பரீட்சையும் நேற்று நடைபெற்றது.

## வடமராட்சி 6கிராமசேவகர்களுக்கு இடமாற்றம்

(பருத்தித்துறை)

வடமராட்சி உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளில் உள்ள ஆறு கிராமசேவையாளர்களுக்கு கடந்த திங்கட்கிழமை தொடக்கம் இடமாற்றம் வழங்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

துன்னாலை மேற்கு கிராமசேவை அலுவலர் கே. வி. சந்திரலிங்கம் பொலிகண்டி மேற்குக்கும் கெருடாவில் கிழக்கு கிராமசேவை அலுவலர் என். பாலசுந்தரம் நாகர்கோவில் கிழக்கிற்கும், நாகர்கோவில்கிழக்கு கிராமசேவை அலுவலர் கே. பாலச்சந்திரன் கெருடாவில் கிழக்கிற்கும், வல்வெட்டித்துறை வடமத்தி கிராமசேவை அலுவலர் கே. ஜெயசீலன் துன்னாலை கிழக்கிற்கும், புலோலி வட

## பருத்தித்துறை - சாவகச்சேரி பஸ்சேவையை ஆரம்பிக்குக

(சாவகச்சேரி)

பருத்தித்துறைக்கும் சாவகச்சேரிக்குமிடையிலான வடபிராந்திய போக்குவரத்து சேவை பஸ் (754) சேவைகள் மீண்டும் ஆரம்பிக்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமென, சரசாலை இந்து இளைஞர் மன்றம் மகஜர் ஒன்றை வடபிராந்தியபோக்குவரத்து சேவை அதிகாரிகளுக்கு அனுப்பி வைத்துள்ளது.

இப்பொழுது சரசாலை, மட்டுவில், மந்துவில், வரணி, கரவெட்டி, பருத்தித்துறைப் பொதுமக்கள் பெரிதும் பிரயாணக் கஷ்டமடைகிறார்கள் அவர்களின் பிரயாணக் கஷ்டங்களை உடன் தீர்த்து வைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் கோரப்பட்டுள்ளது.

இதேபோல சாவகச்சேரி, பருத்தித்துறை 765 ஆம் இலக்க பஸ் சேவையும், வடமராட்சி லிபறேசன் ஒப்பறேசன் நடவடிக்கையின் பின்னர் இடைநிறுத்திவைக்கப்பட்டுள்ளதும் குறிப்பிடத்தக்கது.

இவற்றால் மன்னாரிலிருந்து வடமராட்சிக்கு வரும் பயணிகள் சாவகச்சேரி வந்து பின்னர் கொடிகாமம் சென்றே பருத்தித்துறைக்கு வரவேண்டியுள்ளது. (35)

## நூலகர்கள் ஒன்று கூடல்

(பருத்தித்துறை)

ஈவ்லின் இரத்தினம் பல்லினப் பண்பாட்டியல் நிறுவனத்தில் இம் மாதம் 27 ஆம் திகதி நூலகர் ஒன்று கூடல் நிகழ்ச்சி ஒன்று நடைபெறவுள்ளது.

## கோன்டாடோராவில் விபத்து 20 பேர் பலி

(பனாமா)

பனாமா தீவுகளில் ஒன்றான கொன்டாடோராவில் இருந்து புறப்பட்ட விமானம் விபத்துக்குள்ளாகி 20 பேர் வரை இறந்துள்ளனர்.

விடுமுறையைக் கழிப்பதற்காக கொன்டாடோரா தீவுக்கு சென்ற பிரயாணிகளில் 20 பேரே இவ்வாறு இறந்துள்ளனர்.

இரட்டை இயந்திரம் கொண்டுள்ள இவ் விமானம் தரையில் இருந்து எழுந்து சிறிது நேரத்தில் விழுந்து நொருங்கியது.

பிரெஞ்சு நாட்டைச் சேர்ந்த ஒரு பெண்ணும் வாலிபனும் காயத்துடன் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார்கள். ஆயினும் இவர்களின் நிலை மிக மோசமாகவே காணப்படுகிறது என அதிகாரிகள் கூறுகின்றனர்.

பனாமாவில் உல்லாசப் பிரயாணிகள் அதிகம் செல்லும் இடமாக கொண்டாடோராதீவு விளங்குகின்றமை குறிப்பிடத்தக்கது.

## தமிழ் அறிவியல் நூல்களை வெளியிட ஊக்குவிப்பு

(கொழும்புத்துறை)

நமது எழுத்தாளர்களிடமிருந்து தமிழ் அறிவியல் தொடர்பான நூல்கள் இல்லை என்று கூறுமளவுக்கு மிகவும் குறைவாகவே வெளிவருவதால் இவ்வாறான நூல் வெளியீட்டை ஊக்குவிக்கத் திட்டமிட்டுள்ளதாக யாழ். உள்ளூராட்சித் திணைக்கள உதவி ஆணையாளர் திரு. எஸ். டிவகலாலா தெரிவித்துள்ளார்.

ஈழத்தில் அறிவியல் சம்பந்தமான தமிழ் நூல்களின் அவசியம் அதிகமாகவுள்ளது. அதே நேரம் அறிவியல் நூல்களை எழுதுவோர் அதைச் சந்தைப்படுத்தும் பிரச்சினைகளாலும், பொருளாதாரச் சிக்கல்களாலும் இந்த முயற்சிகளில் ஈடுபடாமலிருக்கலாம்.

அறிவியல் நூல்களை எழுதுவோரை ஊக்குவித்து வளர்க்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது என்று அவர் மேலும் தெரிவித்தார். (24)

## சுகாதார பரிசோதகர் இன்றி வேலணை மக்கள் அவதி

(தீவுப்பகுதி)

வேலணைப் பகுதி பொதுச் சுகாதார பரிசோதகர் கடந்த சில நாட்களாக கடமைக்கு வராததால் பொதுமக்கள் தமது தேவைகளுக்காக அலைகின்றனர்.

முன்பு இந்த அதிகாரிகள் கிழமை நாட்களில் சில தினங்களை பொது மக்களுக்காக ஒதுக்கியுமிருந்தனர்.

ஆனால் தற்போது இது நடைமுறைப்படுத்தப்படுவதில்லை எனவும் தெரிவிக்கப்படுகிறது.

வீடுகள் கட்டுவது, மலசலகூடம், கிணறு கட்டுதல் போன்ற விடயங்களுக்காக இவர்கள் இந்த அதிகாரியைத் தேடி அலையவேண்டியுள்ளது. (15)

## றொட்றிக்கோ மைதானம் மீண்டும் திறக்க நடவடிக்கை

### கிளிநொச்சி அரசாங்க அதிபர் தகவல்

கடந்த காலங்களில் கிளிநொச்சி மாவட்ட மக்களின்

## மொஸ்கோவில் தகவல் சாதன மகாநாடு

(மொஸ்கோ)

பதினோராவது உலக தகவல் சாதன மகாநாடு மொஸ்கோவில் கடந்த 19 ஆம் திகதி முடிவடைந்தது. ஐந்து நாட்களாக நடைபெற்ற இம்மகாநாட்டில் அறுபது நாடுகளைச் சேர்ந்த 500 பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.

## ஹொங்கொங் மக்களுக்கு பிரிட்டிஷ் பிரஜாவுரிமை

(லண்டன்)

இங்கிலாந்தில் வசிக்கும் ஹொங்கொங் மக்களுக்கு பிரித்தானிய அரசாங்கம் புரஜா உரிமை வழங்கவுள்ளது.

வெள்ளிக்கிழமை நடந்த பாராளுமன்றக் கூட்டத்தில் இத் தீர்மானம் எடுக்கப்பட்டது. இத்தீர்மானத்திற்கு ஆதரவாக 313 வாக்குகளும் எதிராக 216 வாக்குகளும் கிடைத்தன. 97 பெரும்பான்மை வாக்குகளால் இத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

இதன்படி 2,25,000 மக்களுக்கு பிரஜா உரிமை கிடைத்திருக்கிறது. இத் தீர்மானத்தின் மீதான வெற்றி பிரதம மந்திரி மார்க்கிரட் தட்சருக்கு கிடைத்த வெற்றியாக கருதப்படுகிறது என பிரித்தானிய அதிகாரிகள் கூறினர். இவ் வாக்கெடுப்பில் பிரதம மார்க்கிரட் தட்சரின் கட்சியான கன்சவேற்றிகட்சி உறுப்பினர்கள் 41 பேர் இதற்கு எதிராக வாக்களித்தமை குறிப்பிடத்தக்கது.

இதே வேளை சீன அரசாங்கம் பிரித்தானியாவின் இச் செய்கையை குறித்து பலத்த கண்டனம் விடுத்துள்ளது. 1997ல் கொங்கொங்கை பிரித்தானியா சீனாவிடம் ஒப்படைக்கும் என முன்னர் கூறியது கவனிக்கத்தக்கது.

## ஐ. நா. சபை விசேட கூட்டம்

(வாஷிங்டன்)

வளரும் நாடுகளுக்கு புத்துயிர் ஊட்டுவதற்கும், மோசமடைந்து வரும் பொருளாதாரப் பாதிப்பில் இருந்து அவற்றை மீட்கவும் ஐக்கிய நாடுகள் சபையின் விசேட கூட்டம் இன்று திங்கட்கிழமை ஆரம்பமாகிறது.

ஆறுநாட்கள் நடைபெறும் இந்தக் கூட்டத்தில் உலகின் பல நாடுகளின் அரசியல் தலைவர்கள், பொருளாதார நிபுணர்கள் கலந்துகொள்வார்கள்.

வளரும் நாடுகளைப் பாதிக்கும் கடன்சுமை குறித்து இங்கு ஆராய்ந்து விவாதிக்கப்படும்.

இந்த விசேடகூட்டம் தொழில்வள நாடுகளான அமெரிக்கா போன்றவற்றுக்குப் பிடிக்கவில்லை எனறும் சம்பந்தப்பட்ட வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

## ஒரு கிராம அபிவிருத்தியில் இளைஞர் பங்களிப்பு அவசியம்

(கொழும்புத்துறை)

'இன்றைய காலகட்டத்தில் கிராம அபிவிருத்திச் சங்கங்கள் தத்தமது பகுதிகளில் சமூக, பொருளாதார, கலை கலாசார, கைத்தொழில் துறைகளை அபிவிருத்தி செய்யத் திட்டங்களை வகுத்துச் செயற்படுவதுடன் சிரமதானப் பணிகளிலும் ஈடுபட வேண்டும்' என யாழ். உதவி அரசாங்க அதிபர் திரு. க. சபாபதிப்பிள்ளை, குறிப்பிட்டார்.

அவர் தொடர்ந்து பேசுகையில்:- 'சமய சமூக சேவைகள் ஒரு புனிதமான பணி என்றும், இதில் ஈடுபடுபவர்கள் தம்மை அர்ப்பணித்து தூயஉள்ளத்துடனும், நல்ல மனதுடனும் பணிபுரிய முன்வர வேண்டுமென்றும்

வடமராட்சி உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளில் உள்ள ஆறு கிராமசேவையாளர்களுக்கு கடந்த திங்கட்கிழமை தொடக்கம் இடமாற்றம் வழங்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

துன்னாலை மேற்கு கிராமசேவை அலுவலர் கே. வி. சந்திரலிங்கம் பொலிகண்டி மேற்குக்கும் கெருடாவில் கிழக்கு கிராமசேவை அலுவலர் என். பாலசுந்தரம் நாகர்கோவில் கிழக்கிற்கும், நாகர்கோவில்கிழக்கு கிராமசேவை அலுவலர் கே. பாலச்சந்திரன் கெருடாவில் கிழக்கிற்கும், வவ்வெட்டித்துறை வடமத்தி கிராமசேவை அலுவலர் கே. ஜெயசீலன் துன்னாலை கிழக்கிற்கும், புலோலி வடமேற்கு கிராமசேவை அலுவலர் கே. சண்முகநாதன் புலோலி மத்திக்கும், புலோலி மத்தி கிராமசேவை அலுவலர் எஸ். நாகதீப சொரூபன் புலோலி வடமேற்கிற்கும் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர். (25)

ஒன்றை வடபிராந்தியபோக்குவரத்து சேவை அதிகாரிகளுக்கு அனுப்பி வைத்துள்ளது.

இப்பொழுது சரசாலை, மட்டுவில், மந்துவில், வரணி, கரவெட்டி, பருத்தித்துறைப் பொதுமக்கள் பெரிதும் பிரயாணக் கஷ்டமடைகிறார்கள்

சன் நடவடிக்கையின் பின்னர் இடைநிறுத்திவைக்கப்பட்டுள்ளதும் குறிப்பிடத்தக்கது.

இவற்றால் மன்னாரிலிருந்து வடமராட்சிக்கு வரும் பயணிகள் சாவகச்சேரி வந்து பின்னர் கொடிகாமம் சென்றே பருத்தித்துறைக்கு வரவேண்டியுள்ளது. (35)

தமான தமிழ் நூல்களின் அவசியம் அதிகமாகவுள்ளது. அதே நேரம் அறிவியல் நூல்களை எழுதுவோர் அதைச் சந்தைப்படுத்தும் பிரச்சினைகளாலும், பொருளாதாரச் சிக்கல்களாலும் இந்த முயற்சிகளில் ஈடுபடாமலிருக்கலாம்.

வராததால் பொதுமக்கள் தமது தேவைகளுக்காக அலைகின்றனர்.

முன்பு இந்த அதிகாரிகள் கிழமை நாட்களில் சில தினங்களை பொதுமக்களுக்காக ஒதுக்கியுமிருந்தனர்.

ஆனால் தற்போது இது நடைமுறைப்படுத்தப்படுவ

போன்ற விடயங்களுக்காக இவர்கள் இந்த அதிகாரியைத் தேடி அலையவேண்டியுள்ளது. (15)

அமெரிக்கா போன்றவற்றுக்குப் பிடிக்கவில்லை எனறும் சம்பந்தப்பட்ட வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

## நூலகர்கள் ஒன்று கூடல்

(பருத்தித்துறை)

ஈவ்லின் இரத்தினம் பல்லினப் பண்பாட்டியல் நிறுவனத்தில் இம் மாதம் 27 ஆம் திகதி நூலகர் ஒன்று கூடல் நிகழ்ச்சி ஒன்று நடைபெறவுள்ளது.

இவ் ஒன்று கூடலின் போது நூலகங்களில் பத்திரிகை ஏட்டுப் புத்தகம் தயாரித்தல் தொடர்பான கருத்தரங்கு இடம்பெறவுள்ளது.

யாழ். மாவட்டத்திலுள்ள பொது நூலகங்கள் அனைத்தையும் ஒரு வலையமைப்புக்குட்படுத்தி நூலகமொன்றுக்கு மூன்று விடயங்கள் என்ற விதத்தில் பல்வேறு தலைப்புக்களின் கீழ் இத்தகைய ஏட்டுப் புத்தகங்கள் தயாரித்தல் தொடர்பாக கருத்துக்களை குரும்பசிட்டி இரா. கனகரத்தினம் வழங்குவார்.

## றொட்றிக்கோ மைதானம் மீண்டும் திறக்க நடவடிக்கை

### கிளிநொச்சி அரசாங்க அதிபர் தகவல்

(கிளிநொச்சி)

சிறந்த ஒரு விளையாட்டு மைதானம்கூட இல்லாதிருக்கும் இவ்வேளையில் இம் மாவட்டத்து இளைஞர்கள் புதிய சாதனைகளை நிலைநாட்டியுள்ளது இம்மாவட்டத்திற்கே பெருமையைத் தேடித்தந்துள்ளது.

ஆதலால் இவ் இளைஞர்கள் சிறந்த பயிற்சிகளைப்பெறக்கூடிய நல்லதொரு விளையாட்டு மைதானத்தை அரசாங்கத்துடன் பேசி எடுத்துத்தர என்னாலான முயற்சிகளை மேற்கொள்ளுவேன்.

கண்டாவளை உதவி அரசாங்க அதிபர் பிரிவிலுள்ள விளையாட்டுக் கழகங்களுக்கிடையே புதுவருடத்தன்று நடாத்தப்பட்ட விளையாட்டுப் போட்டியில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றிய கிளிநொச்சி அரசாங்க அதிபர் திரு. க. மாணிக்கவாசகர் மேற்கண்டவாறு கூறினார்.

பரந்தன் இளைஞர் வட்ட விளையாட்டு மைதானத்தில் கண்டாவளை உதவி அரசாங்க அதிபர் திரு. சதா. தனபாலசிங்கம் தலைமையில் நடைபெற்ற இப்போட்டியில் அரசாங்க அதிபர் திரு. மாணிக்கவாசகர் தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது:—

கடந்த காலங்களில் கிளிநொச்சி மாவட்ட மக்களின் சிறந்த விளையாட்டு மைதானமாக இருந்துவந்த றொட்றிக்கோ மைதானம் இங்கு ஏற்பட்ட அசம்பாவிதங்களினால் இளைஞர்கள் அதைப் பாவிக்க முடியாது போய்விட்டது.

இன்று அந்த நிலை மாறிவிட்டது. இன்று எங்கும் அமைதி நிலவுகிறது. ஆதலால் இந்த மைதானத்தை சம்பந்தப்பட்ட அரச உயர் அதிகாரிகளுடன் தொடர்பு கொண்டு பெற்றுத்தர ஆவன செய்வேன்.

விளையாட்டு மைதானத்திற்குள் வரும்போது சகல வீரர்களும் ஒற்றுமையாகவும், நட்புறவோடும் வரவேண்டும். விளையாட்டில் ஈடுபடும் போது வெற்றியை நோக்கமாகக் கொண்டு செயல்படவேண்டும். விளையாட்டு முடிந்து வெளியே செல்லும் போதும் ஒற்றுமையாகச் செல்ல வேண்டும். இதைத்தான் இளைஞர்கள் ஒவ்வொருவரும் விளையாட்டு மைதானத்தில் கற்றுக்கொள்ளும் பாடமாகக் கொள்ள வேண்டும்.

வெற்றி என்றும் நிலைத்து நிற்பதுமில்லை. அதேபோல் தோல்வியும் என்றும்நிலைத்து நிற்பதில்லை. விடாமுயற்சியே வெற்றிக்குக் காரணம். அகம்பாவமும், மமதையும் தோல்விக்குக் காரணம்.

போட்டியில் வெற்றியீட்டியவர்கள் தோல்வியுற்றவர்களைப் பார்த்து எள்ளிநகையாடக் கூடாது. அதேபோல தோற்றவர்கள் துவண்டுவிடக் கூடாது என்றார்.

## ஒரு கிராம அபிவிருத்தியில் இளைஞர் பங்களிப்பு அவசியம்

(கொழும்புத்துறை)

'இன்றைய காலகட்டத்தில் கிராம அபிவிருத்திச் சங்கங்கள் தத்தமது பகுதிகளில் சமூக, பொருளாதார, கலை கலாசார, கைத்தொழில் துறைகளை அபிவிருத்தி செய்யத் திட்டங்களை வகுத்துச் செயற்படுவதுடன் சிரமதானப் பணிகளிலும் ஈடுபடவேண்டும்.

குறிப்பாக இளைஞர்களும் இந்தச்சங்கங்களில் இணைந்து ஒன்றுபட்டுத் தங்கள் பகுதியை முன்னேற்றவும், அபிவிருத்தி செய்யவும், தங்கள் பங்களிப்பைச் செலுத்த முன்வர வேண்டும்'.

இவ்வாறு கொழும்புத்துறை கிராம அபிவிருத்திச் சங்கத்தின் பொதுச்சபை உறுப்பினர்களுக்குச் சுழற்சி முறையிலான ஆடுகள் வழங்கும் வைபவத்தில் பிரதம விருந்தினராகப் பங்குபற்றி உரையாற்றிய யாழ். உதவி அரசாங்க அதிபர் திரு. க. சபாபதிப்பிள்ளை குறிப்பிட்டார்.

அவர் தொடர்ந்து பேசுகையில்:— 'சமய சமூக சேவைகள் ஒரு புனிதமான பணி என்றும், இதில் ஈடுபடுபவர்கள் தம்மை அர்ப்பணித்து தூயஉள்ளத்துடனும், நல்ல மனதுடனும் பணிபுரிய முன்வர வேண்டுமென்றும்,

இப் பின்தங்கிய பகுதியை முன்னேற்ற எல்லோரும் ஒன்றுபட்டுச் செயற்பட்டால் இக்கிராமம் துரிதமுன்னேற்றமடைய ஏதுவாக இருக்கும் என்றும் கேட்டுக்கொண்டார்.

யாழ். செயலக கிராம அபிவிருத்தித் திணைக்களப் பொறுப்பதிகாரி திரு. கே. சீவரத்தினம் பேசுகையில்:—

எமது திணைக்களத்தினால் பின்தங்கிய பகுதிகளில் உள்ள கிராம அபிவிருத்திச் சங்கங்களுக்குப் பல வகையிலும் உதவிகள் செய்து வருகின்றோம். உங்கள் சங்கப் பொதுச்சபை உறுப்பினர்களுக்குச் சுழற்சிமுறையில் ஆடுகளை வழங்குதவற்கு இச்சங்கம் கிராமத்திற்குச் செய்யும் நல்ல சேவைகளை உணர்ந்தே நிதி ஒடுக்கீடு செய்தோம்.

எனவே தொடர்ந்தும் நம்பிக்கை, நாணயத்துடன் பணத்தைத் திருப்பிக்கட்டி நல்ல முறையில் செயற்பட்டு இப்பகுதியையும், மக்களையும் முன்னேற்றுவீர்களென எதிர்பார்க்கின்றோம் என்றார். (24)

## விளையாட்டு போட்டியும் அஞ்சலிக் கூட்டமும்

(கரவெட்டி)

கரவெட்டி வெல்லன் விநாயகர் ஆலயத்திற்கு அருகாகாமையிலுள்ள உப்புவெளியில் நடந்த இந்தியப்படையினருடனான நேரடி மோதலில் வீரமரணமடைந்த வீரவேங்கைகள் கப்டன் மோகன் மாஸ்ரர் (நெல்லியடிப் பிரதேசப் பொறுப்பாளர்) லெப்டினன் முரளி, இளம் புலி பட்சம் ஆகியோரின் இரண்டாம் ஆண்டு நினைவாக சுடரொளி விளையாட்டுக் கழகம் மாபெரும் விளையாட்டுப் போட்டியும், அஞ்சலிக் கூட்டமும் நடாத்தவுள்ளது. (18)

## பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் அணி வெற்றி

யாழ். பல்கலைக்கழக விரிவுரையாளர்களுக்கும், யாழ். வர்த்தக வங்கி அணியினருக்கும் இடையே நடைபெற்ற ஓவர்களைக் கொண்ட மென்பந்து கிரிக்கட் போட்டியில் 25 பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் 56 ஓட்டங்களால் வெற்றியீட்டினர்.

கடந்த சனிக்கிழமை பல்கலைக்கழக மைதானத்தில் நடைபெற்ற இப்போட்டியில், முதலில் துடுப்பெடுத்தாடிய பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் தமக்கு ஒதுக்கப்பட்ட 25 ஓவர்களில் 8 விக்கட்டுக்களை இழந்து மொத்தம் 138 ஓட்டங்களைப் பெற்றனர். கே. பாலேந்திரன் 46 ஓட்டங்களைப் பெற்றார். வர்த்தக வங்கி அணி சார்பில் ராஜ்மனோகர், நவக்குமாரன் ஆகியோர் தலா 2 விக்கட்டுக்களைக் கைப்பற்றினர். 4 ஆட்டக்காரர்கள் ரன் - அவுட் முறையில் ஆட்டமிழந்தனர்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய வர்த்தக வங்கி அணியினர் 15. 3 ஓவர்களில் சகல விக்கட்டுக்களையும் இழந்து 82 ஓட்டங்களை மட்டும் பெற்றனர். ஜெயபாலன் 23 ஓட்டங்களையும், உமாகாந்தன் 22 ஓட்டங்களையும் பெற்றனர். இவர்கள் ஒருகட்டத்தில் 2 விக்கட்டுக்களை மட்டும் இழந்து 40 ஓட்டங்களைப் பெற்றிருந்தனர். பின் ஒரு கட்டத்தில் 4 விக்கட்டுகளுக்கு 72 ஓட்டங்களைப் பெற்றிருந்தனர். கடைசி 6 விக்கட்டுக்களையும் 10 ஓட்டங்களில் இழந்தனர்.

பந்துவீச்சில் கே. பாலேந்திரா 5 விக்கட்டுக்களைவும், முரளிதரன் 3 விக்கட்டுக்களையும் கைப்பற்றினர்.

## பண்டிகை முற்பணம்

(அட்டாளைச்சேனை)

கிழக்குப் பிராந்தியப் போக்குவரத்துச்சபை ஊழியர்களுக்குச் சபையினால் பண்டிகை முற்பணம் நிரந்தர ஊழியர்களுக்கு ஆயிரம் ரூபா சமயா சமய ஊழியர்கள், ஒப்பந்த ஊழியர்களுக்கு தலாஐந்நூறு ரூபா வழங்கப்பட்டுள்ளது என்பது குறிப்பிடப்பட்டுள்ளது. (46)

## பணம் ஒதுக்கிப் பலவருடம்! இன்னும் மின்விநியோகமில்லை!

(வவுனியா)

வவுனியா மாவட்டத்தில் உள்ள பூவரசங்குளம், சாளம்பைக்குளம், இயங்கராவூர் ஆகிய கிராமங்களுக்கு மின்விநியோகம் வழங்குவதற்குரிய பணம் ஒதுக்கிப் பலவருடங்கள் ஆகிவிட்டபோதிலும், இதற்கான வேவைகள் எதுவும் ஆரம்பிக்கப்படவில்லை என்று அக்கிராமங்களைச் சேர்ந்த மக்கள் புகார் தெரிவித்துள்ளனர்.

அதேசமயம், வவுனியா, மன்னார் வீதி சேதமடைந்திருப்பதாகவும், அவ்வீதியால் பிரயாணம் மேற்கொள்ள வாகனச் சாரதிகள் மறுத்து வருவதாகவும் கூறப்படுகிறது.

பொறுப்புள்ளவர்கள் கவனமெடுத்து, இக்குறைபாடுகளைப் போக்கவேண்டும் என்று, அவ்வீதியால் பிரயாணம் செய்யும் மக்கள் ஈழநாதம் நிருபரிடம் புகார் தெரிவித்துள்ளனர்.

ஐந்து ஆண்டுகளுக்கு முன் வவுனியா திட்டமிடல் பணிப்பாளர் மேற்படி கிராமங்களில் மின்விநியோக வேலைகளை ஆரம்பிக்கும்படி பணித்திருந்த போதிலும், கடந்த கால வன்செயல் சம்பவங்கள் காரணமாக அவ்வேலைகளை ஆரம்பிக்க முடியவில்லை என்று இதோடு சம்பந்தப்பட்ட அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (தி)

## இருளில் மூழ்கியுள்ளது

(ஈச்சமோட்டை)

கொழும்புத்துறை வளன்புரம் எனும்கிராமம் இரவில் இருளில் மூழ்கி காட்சியளிக்கிறது.

ஒரு சில மின்குமிழ்கள் சிலருடைய வீடுகளுக்கு முன்னால் பொருத்தப்பட்டிருக்கிறது. அதுவும் போதிய பிரகாசம் இல்லாமல் டிம்லைட்டாக காட்சி தருகிறது.

இதே போன்று சுவாமியார் குறுக்கு வீதியும் இருளில் மூழ்கியுள்ளது. (43)

## விடுதிகள் சேதம்

(தீவுப்பகுதி)

வேலணை அரசினர் ஆஸ்பத்திரியின் குடும்ப நலசேவையாளர் விடுதிகள் முற்றாக சேதமடைந்துள்ளன. அவைகள் தற்போது ஆஸ்பத்திரிகட்டிடங்களில் குடும்பங்களுடன் தஞ்சமடைந்துள்ளனர்.

கடந்த காலங்களில் ஏற்பட்ட அனர்த்தங்களினால் குடும்பநலசேவையாளர்களின் விடுதிகள் சேதமாக்கப்பட்டு விட்டது குறிப்பிடத்தக்கது.

## பூபாலசிங்கத்தின் சேவைக்கு பேராசிரியர் பாராட்டு

(வேலணை)

சம உடமைக் கொள்கையுடன் ஆன்மீகத் துறையையும் சேர்த்து வளர்த்த பெருமை அமரர் தோழர் ஆர். ஆர். பூபாலசிங்கம் அவர்களைச் சாரும்.

இன்று அவரது உருவப் படத்தை திரை நீக்கம் செய்து வைப்பதில் மிக்க மகிழ்ச்சி அடைகின்றேன்.

நயினாதீவு மணிபல்லவ கலாமன்றத்தின் 28 ஆவது ஆண்டு நிறைவு விழாவின் போது பேராசிரியர் கா. சிவத்தம்பி பேசுகையில் கூறினார்.

நிலையத் தலைவர் திரு. வி. சபாநாதன் ஜே. பி. தலைமையில் நடைபெற்ற வைபவத்தில் ஆரம்பத்தில் மறைந்த நிலைய உறுப்பினர்களுக்கும் விடுதலை புலிகள் இயக்கத்தைச் சேர்ந்த வீரமரணமடைந்த போராளிகளுக்கும், தியாகியான திலீபன், அன்னை, பூபதி ஆகியோர்களின் ஆத்ம சாந்திக்காகவும் இரு நிமிடநேர அஞ்சலிகள் செலுத்தப்பட்டன.

இவ் வைபவத்தில் யாழ் மாவட்ட அரசாங்க அதிபரும் மற்றும் உள்ளூர் பிரமுகர்களும் கலந்து கொண்டனர். (14)

# நாங்கள் அமர்ந்திருக்கும் மண்ணும் மேடையும் போராளிகளின் கல்லறைகள் மீது உள்ளது

(பூநகரி)

''இன்றைய நாள் ஓர் எழுச்சி நாளாக தமிழீழமெங்கும் கொண்டாடப்படுகின்றது. இந்த எழுச்சிவிழாவுக்கு முக்கிய காரணமாகவுள்ளவர்கள் தமிழீழ விடுதலைப் புலிகளும், தமிழீழ மக்களுமாகிய நீங்களுமே. இந்த இரண்டு பகுதிகளும் சேர்ந்து நடத்திய சாதனைகளை உலக அரங்கில் எடுத்துக்காட்டுவதாகவே இந்த எழுச்சி விழாவை நடாத்திக் கொண்டிருக்கின்றோம். எனவே நாம் இவ் விழாவை ஒரு பொழுது போக்கு நிகழ்ச்சியாக நினைத்துவிடக் கூடாது''

என கடந்த வியாழக்கிழமை பூநகரியில் நடைபெற்ற அன்னை பூபதியின் இரண்டாவது ஆண்டு நிறைவையொட்டி நடாத்தப்பெற்ற மாபெரும் எழுச்சி விழாவின்போது பேசிய மன்னார் மாவட்ட அரசியல் பொறுப்பாளர் திரு. சுரேஸ் கூறினார்.

அவர் தொடர்ந்து பேசுகையில், நாம் அமைந்திருக்கும் இப் புனிதமான மேடையும் நீங்கள் அமர்ந்திருக்கும் அந்த நிலப்பரப்பும், எமது விடுதலைக்காய் தங்கள் உயிர்களையே தியாகம் செய்த, எமது சகதோழர்களின் கல்லறைகளின் மேல் அமைந்திருக்கின்றது. என்பதை மறந்து விடக்கூடாது என அவர் தெரிவித்தார்.

இவ் எழுச்சி விழா அன்று காலை 8.30 மணிக்கு உண்ணாவிரதம் ஆரம்பிக்கப்பெற்று மாலை 5.00 மணிக்கு முடிவடைந்தது. உண்ணாவிரத முடிவில் அஞ்சலி உரைகளும் இடம் பெற்றன.

இவ் விழாவில் விடுதலைப் புலிகள் அமைப்பைச் சேர்ந்த பல பிரமுகர்கள் உரையாற்றினார்கள். தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்க மக்கள் முன்னணியின் மகளிர் படைப் பிரிவுப் பொறுப்பாளர் செல்வி லூலிக் பேசுகையில், ''நாம் பதினேழு வருடங்களாகப் போராடிவருகின்றோம். அதில் பதினைந்து வருடங்கள் இலங்கை இராணுவத்துடனும், இரண்டு வருடங்கள் இந்திய இராணுவத்துடனும் போராட்டம் நடத்தினோம். ஆனால் இப் போராட்டத்தில் பெண்களின் பங்களிப்பு கடந்த ஆறு ஆண்டுகளாகத் தான் உருவானது. எனினும் எமது பகுதியிலே ஆண்களை விடப் பெண்கள் கூடுதலாக வாழ்ந்தாலும் பெண்களின் பங்களிப்பு குறைவாகவே காணப்படுகின்றது. இதற்குக் காரணம் பெண்கள் அடிமைப் படுத்தப்படுவது எனக் குறிப்பிட்டார்.

தமிழீழ விடுதலைப் புலிகளின் மக்கள் முன்னணியின் பூநகரிப் பிரதேசப் பொறுப்பாளர் திரு. சாம் தமதுரையில் அன்னை பூபதி உலகிலே உண்ணாவிரதம் இருந்து முதல் முதல் தியாக மரணமடைந்த முதற் பெண்மணி இவர்.

உண்ணாவிரதம் இருக்கும் பொழுது இந்திய நாட்டின் அரைவாசியைத் தரும்படியோ அல்லது ஈழத்தைப் பிரித்துத் தரும்படியோ கேட்கவில்லை. முன்வைத்தது இரண்டே இரண்டு சாதாரண கோரிக்கைதான். ஒன்று விடுதலைப் புலிகளுடனான காலவரையற்ற யுத்த நிறுத்தம் செய்யப்பட வேண்டும்.

இரண்டாவது விடுதலைப் புலிகளுடன் நிபந்தனையற்ற பேச்சுவார்த்தை செய்யப்பட வேண்டும்.

இதுவே அன்னையின் கோரிக்கை. இதை நிறைவு செய்ய முடியாத இந்தியப் படையும், இந்திய அரசும் தமிழீழ மக்களைக் காக்க வந்தது என்று எப்படிச் சொல்ல முடியும் என்று அவர் குறிப்பிட்டார்.

இவர்களைத் தொடர்ந்து சிற்றூரவைத் தலைவர்களும் உரை நிகழ்த்தினார்கள். இவ்வுரைகளைத் தொடர்ந்து பல புரட்சிகர நாடகங்களும் நடனங்களும் இடம்பெ

றன. இவ் விழாவையொட்டி நடந்த விளையாட்டுப் போட்டியில் வெற்றியீட்டியவர்களுக்கு பரிசில்கள் வழங்கப் பெற்றது. இவ் விழாவில் பல்லாயிரக் கணக்கான மக்கள் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

## சங்கானை ஆஸ்பத்திரியில் சாரதியின்றி அம்புலன்ஸ் வண்டி காட்சிப் பொருளாக உள்ளது

(பண்டத்தரிப்பு)

சங்கானை அரசினர் வைத்தியசாலையில் உள்ள அம்புலன்ஸ் வண்டி சாரதியின்றி காட்சிப்பொருளாக உள்ளது.

அண்மையில் இந்த அம்புலன்ஸ் வெளிநாட்டு நிறுவனம் ஒன்றால் அன்பளிப்பாக வழங்கப்பட்டது.

சாரதியில்லாததால் அவசிய நோயாளிகள் உறவினர்களால் தனியார் வாகனங்கள் மூலமே யாழ். பெரியாஸ்பத்திரிக்கு அனுப்பப்படுகின்றன.

இங்கு சாரதி இல்லாதது குறித்து சம்பந்தப்பட்டவர்களுக்கு பல தடவைகள் புகார்கள் தெரிவிக்கப்பட்டிருந்தும் இதுவரை தற்காலிமாக ஒருவரையாவது நியமிக்கவில்லை.

## ஆலய உற்சவம்

(புங்குடுதீவு)

புங்குடுதீவு கிழக்கு கண்ணகை அம்மன் என வழங்கும் ஸ்ரீ இராஜராஜேஸ்வரி அம்பாள் ஆலய வருடாந்த மகோற்சவம் இம் மாதம் 25 ஆம் திகதி புதன்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்மாகி தொடர்ந்து பதினைந்து நாட்களுக்கு நடைபெறு.

# போராளிகளதும் அன்னையதும் சரித்திரம் ஆராயப்படவேண்டும்

(கிளிநொச்சி)

இறந்த போராளிகளினதும் அன்னை பூபதி கணபதிப்பிள்ளையினதும் சரித்திரம் முறையாக ஆராயப்பட்டு அவை சரித்திரப் புத்தகங்களாக வெளிவரவேண்டும். அவை ஒவ்வொரு பாடசாலையிலும் பாடப்புத்தகமாக இருந்து மாணவர்களுக்குப் போதிக்கப்படல் வேண்டும்.

தமிழீழ விடுதலைப் புலிகளின் முல்லைத்தீவு மாவட்ட அரசியல் இணைப்பாளர் திரு. கைலாஸ் அன்னை பூபதியின் எழுச்சி விழாவில் கலந்து கொண்டு பேசுகையில் மேற்கண்டவாறு கூறினார்.

முத்தையன் கட்டு வலது கரை தான் தோன்றி நாகதம்பிரான் ஆலய முன்றலில் செல்வி றாஜினி யேசுதாசன் தலைமையில் நடைபெற்ற இக் கூட்டத்தில் ஒட்டுசுட்டான், முத்தையன்கட்டு, கற்சிலைமடு புளியங்குளம், கருவேலங்கண்டல் ஆகிய கிராமங்களிலிருந்து மக்கள் பெரும் தொகையாக ஊர்வலமாகச் சென்றனர். ஊர்திகளின் பவனியும் இடம்பெற்றது. மகரதோரணங்களாலும், பல வர்ணக்கொடிகளாலும் வீதிகள் அனைத்தும் அலங்கரிக்கப்பட்டிருந்தன.

திரு. கைலாஸ் தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது:-

இன்று மக்கள் அனைவரும் சினிமாப் பைத்தியம் பிடித்து அலைகிறார்கள். அந்த நிலை மாற்றி அமைக்கப்படவேண்டும். தமிழ் மக்களின் பாரம்பரியம் பற்றி, அவர்களின் வீர வரலாறுகளைப் பற்றி இளைஞர்கள்அறியவேண்டும். தமிழ் மக்களின் வீரமிக்கப் போராட்டங்கள் காவியமாகவும், ஓவியமாகவும தீட்டப்படவேண்டும். பண்டைக்கால மறத்தமிழரின் வீரம் முதல் இன்றைய இளம் வீரர்களின் சரித்திரங்கள் வரை நூலுருப் பெறவேண்டும். அவற்றை

## விளையாட்டு வீரர்களுக்கு துணிச்சல் மிகவும் அவசியம்

(கிளிநொச்சி நிருபர்)

இளைஞர்கள் எதிர்காலத்தில் நல்ல பிரஜைகளாகவும் வல்லபிரஜைகளாகவும் வாழ வேண்டும். நல்லவர்களின் சேர்க்கையால் நல்லபிரஜைகளாக முடியும்.

வல்லவர்களுடன் சேர்த்து வாழ்வதால் மட்டும் இளைஞர்கள் வல்லவராகி விட முடியாது' வல்லவர்களுடன் மோதி வெல்வதன் மூலம் தான் வல்ல பிரஜையாக வாழ முடியும்.

கிளிநொச்சி 154 ஆம் கட்டை செல்வபுரம் விளையாட்டு மைதானத்தில் நடைபெற்ற புது வருட விளையாட்டுப் போட்டியில் பிரதம விருந்தினராக கலந்து கொண்டு உரையாற்றிய பிராந்திய விவசாய ஆராய்ச்சி நிலைய முகாமையாளர் திரு என். தவராசா மேற்கண்டவாறு கூறினார்.

திரு. மு. யோகவேல் தலைமையில் நடைபெற்ற இவ் விளையாட்டுப் போட்டியில் விவசாய ஆராய்ச்சி முகாமையாளர் தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது:-

எமது உடல் திடகாத்திரமாக இருக்க உணவு மட்டும் கிடைத்தால் போதாது. நல்ல உடற்பயிற்சியும் வேண்டும், இது போன்று விளையாட்டுமைதானங்களில் இருந்து பெறும் பயிற்சியே சிறந்த பயிற்சியாகும்.

எம்மை எதிர்த்து வரும் பந்தையோ, அன்றி எதிரியையோ கண்டு நாம் பயந்து விடக் கூடாது' அதை எதிர் கொள்ளக்கூடிய துணிச்சல் ஒவ்வொருவருக்கும் இருக்க வேண்டும். அப்போது தான் நாம் எதையும் சமாளித்து வாழமுடியும்.

வட கிழக்கிலேம் முறைஇதான் அமைதி நிலவுகிறது. இந்த நிலை தொடர வேண்டும். மக்கள் பயமின்றிச் சுதந்திரமாக வாழவேண்டும் என்றார்.

திரு' எஸ். கந்தசாமி திருமதி புஸ்பராணி சாமுவேல் திரு. பி. சக்திவேல் உட்பட பலர் உரையாற்றினர்.

## சங்கத்துக்கு லொறி

(கோண்டாவில்)

நல்லூர் பலநோக்கு கூட்டுறவு சங்கம் புதிதாக லொறி ஒன்றை வாங்கியுள்ளது.

ஏற்கனவே இருந்த மூன்று லொறிகளில் ஒன்று 1987ஆம் ஆண்டு ஷெல் தாக்குதலில் அழிந்ததை ஈடு செய்யும் வகையிலேயே இந்த புதிய லொறி வாங்கப்பட்டுள்ளது.

## தபால் பெட்டிகள் சேதம்

(தீவுப்பகுதி)

தீவுப்பகுதி மக்கள் தமது கடிதங்களை இங்குள்ள தபால் பெட்டிகளில் போடமுடியாத நிலையில் உள்ளனர். இப் பகுதிகளில் உள்ள அனேகம் தபால் பெட்டிகள் உடைந்த நிலையிலும், கதவுகள் திறந்த நிலையிலும் இருப்பதே இதற்குக் காரணமாகும்.

இதனால் தமது கடிதங்களைப் அனுப்புவதற்கு தபால் நிலையங்களுக்கு அலைந்து செல்லும் நிலை ஏற்பட்டுள்ளது.


மல்லாகம் அருள்மிகு காளிகாதேவி ஆலய

**வருடாந்த**

**சங்காபிஷேகத் திருவிழா**

மேற்படி ஆலய சங்காபிஷேகம்
சித்திரை மாதம் 8 ஆம் திகதி (21- 4- 90)
சனிக்கிழமை சிறப்பாக நடைபெற்றது

மல்லை நகரின் மாகாளி
சிங்கம் தனிலுறை சிங்காரி
வினை தனை அறுப்பாள் கருமாரி
கருணைக் கடலே காமாட்சி
மின்னும் ஒளியுடை மீனாட்சி
மானில மெங்கும் உன்னாட்சி
வீரம் கொண்டாள் பராசக்தி
சரணம் அடைந்தோம் ஓம் சக்தி

பிரசுரிப்பவர் — மு. அற்புததேவன்
எழுதியவர் — க. மனோகரன்

(B/658)



திக்கம் வடிசாலை

விளம்பரம்



அந்தியேட்டியும்

வீட்டுக் கிருத்தியமும்

பிறப்பு
24



இறப்பு
26

(கிளிநொச்சி)

இறந்த போராளிகளினதும் அன்னை பூபதி கணபதிப்பிள்ளையினதும் சரித்திரம் முறையாக ஆராயப்பட்டு அவை சரித்திரப் புத்தகங்களாக வெளிவரவேண்டும். அவை ஒவ்வொரு பாடசாலையிலும் பாடப்புத்தகமாக இருந்து மாணவர்களுக்குப் போதிக்கப்படல் வேண்டும்.

தமிழீழ விடுதலைப் புலிகளின் முல்லைத்தீவு மாவட்ட அரசியல் இணைப்பாளர் திரு. கைலாஸ் அன்னை பூபதியின் எழுச்சி விழாவில் கலந்து கொண்டு பேசுகையில் மேற்கண்டவாறு கூறினார்.

முத்தையன் கட்டு வலது கரை தான்தோன்றி நாகதம்பிரான் ஆலய முன்றலில் செல்வி றாஜினி யேசுதாசன் தலைமையில் நடைபெற்ற இக் கூட்டத்தில் ஒட்டுசுட்டான், முத்தையன்கட்டு, கற்சிலைமடு புளியங்குளம், கருவேலங்கண்டல் ஆகிய கிராமங்களிலிருந்து மக்கள் பெருந்தொகையாக ஊர்வலமாகச் சென்றனர். ஊர்திகளின் பவனியும் இடம்பெற்றது. மகரதோரணங்களாலும், பல வர்ணக்கொடிகளாலும் வீதிகள் அனைத்தும் அலங்கரிக்கப்பட்டிருந்தன.

திரு. கைலாஸ் தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது:-

இன்று மக்கள் அனைவரும் சினிமாப் பைத்தியம் பிடித்து அலைகிறார்கள். அந்த நிலை மாற்றி அமைக்கப்படவேண்டும். தமிழ் மக்களின் பாரம்பரியம் பற்றி, அவர்களின் வீர வரலாறுகளைப் பற்றி இளைஞர்கள்அறியவேண்டும். தமிழ் மக்களின் வீரமிக்கப் போராட்டங்கள் காவியமாகவும், ஓவியமாகவும தீட்டப்படவேண்டும். பண்டைக்கால மறத்தமிழரின் வீரம் முதல் இன்றைய இளம் வீரர்களின் சரித்திரங்கள் வரை நூலுருப் பெறவேண்டு.ம் அவற்றை எமது எதிர்காலச் சந்ததியினர் வாசிக்க வேண்டும்.

விடுதலைப் புலிகளின் முல்லைத்தீவு மாவட்ட கலை கலாசாரப் பொறுப்பாளர் திரு.சங்கர், முத்தையன்கட்டு பொறுப்பாளர் திரு. தம்பி பாலன், அன்னையர் முன்னணித் தலைவி திருமதி ருக்கா,இடதுகரைப் பொறுப்பாளர் திரு. இராசன் உட்பட மற்றும் பலரும் உரையாற்றினர். (2)

படையும், இந்திய அரசும் தமிழீழ மக்களைக் காக்க வந்தது என்று எப்படிச் சொல்ல முடியும் என்று அவர் குறிப்பிட்டார்.

இவர்களைத் தொடர்ந்து சிற்றூரவைத் தலைவர்களும் உரை நிகழ்த்தினார்கள். இவ்வுரைகளைத் தொடர்ந்து பல புரட்சிகர நாடகங்களும் நடனங்களும் இடம்பெ)

தான் அமைதி நிலவுகிறது. இந்த நிலை தொடர வேண்

றன. இவ் விழாவையொட்டி நடந்த விளையாட்டுப் போட்டியில் வெற்றியீட்டியவர்களுக்கு பரிசில்கள் வழங்கப் பெற்றது. இவ் விழாவில் பல்லாயிரக் கணக்கான மக்கள் கலந்துகொண்டு சிறப்பித்தனர்.

## மதவு திருத்தாததால் மக்கள் கஷ்டம்

இந்தியப் படையினரால் குண்டு வைத்துத் தகர்க்கப்பட்ட பருத்தித்துறை-சாவகச்சேரிப் போக்குவரத்துப் பாதையிலுள்ள பளகளி மதவு இன்னமும் செப்பனிடாத நிலையிலேயே காட்சி தருகின்றது. இதனால் பருத்தித்துறை சாவகச்சேரி செல்லும் வாகனங்கள் வரணி, கொடிகாமம் மூலமே பயணம் செய்வதையும் அவதானிக்க முடிகின்றது. இதனால் பயணிகளும், வாகனகாரர்களும் பெரும் கஷ்டத்தை எதிர் கொண்டுவருவதாகவும் கருதப்படுகின்றது. (18)


# பார்வையற்றோர் பார்வைகுறைந்தோருக்கான கல்வி

- மேற்படி கல்வி வசதி நவீல்ட் பாடசாலை கைதடியில் உள்ளது.
- கல்வி, விடுதிவசதி, உணவு யாவும் இலவசம்
- சிறு பிள்ளைகளைப் பராமரிப்பதற்கு விசேட உதவியாளர் உண்டு.
- 5 வயதிற்குட்பட்ட பிள்ளைகளுக்கு வீட்டிலேயே பயிற்சி அளிக்கும் திட்டம் உண்டு.
- பல்கலைக்கழகப் படிப்புவரை வசதிசெய்து கொடுக்கப்படும்.

நேரில் அல்லது கடித மூலம் தொடர்பு கொள்க.
அதிபர்,
**நவீல்ட் பாடசாலை**
**விழிப்புலனிழந்தோர் கல்வி நிலையம்**
**கைதடி.**

(B/811)



## திக்கம் வடிசாலை
# விளம்பரம்

மேற்படி நிறுவனத்தில் பின்வரும் பதவி வெற்றிடங்கள் உண்டு. இவற்றுக்கான நேர்முகப் பரீட்சை மூலமான தேர்வு 05.05.1990 சனிக்கிழமை காலை 10 மணிக்கு மேற்படி நிறுவனத்தின் பணிமனையில் நடைபெறும்.

| | |
|---|---|
| கொதிகலன் இயக்குனர் | 01 |
| வடிகலன் இயக்குனர் | 01 |
| காவலாளி / பாதுகாப்பு உத்தியோகத்தர் | 02 |
| வேலையாளர் | 02 |

விண்ணப்பதாரிகள் 18 - 55 வயதுக்குட்பட்டவராய் இருத்தல் வேண்டும். வடிசாலைக்கு அண்மையில் வசிப்பவர்க்கு முன்னுரிமை வழங்கப்படும்.

பரீட்சைக்குத் தோற்றுபவர் பதவிக்குரிய விண்ணப்பம், பிறப்புச்சாட்சிப் பத்திரம், கல்வி தொழில் நுட்ப தகைமைச் சான்றிதழ், நற்சாட்சிப் பத்திரம் ஆகியனவற்றின் மூலப் பிரதிகளைக் கொண்டு வருதல் வேண்டும்.

சம்பளம் தெரிவு செய்யப்பட்டவர்களுடன் நேரில் பேசி முடிவு செய்யப்படும். நியமனம் முற்றிலு ம்சமயோசிதமானது. தெரிவுசெய்யப்பட்டவர்கள் உடனடியாக சேவையில் அமர்த்தப்படவுள்ளனர்.

— தலைவர்

திக்கம் வடிசாலை,
அவ்வாய்.

(R/425)


## அந்தியேட்டியும் வீட்டுக் கிருத்தியமும்

பிறப்பு 24 — 05 — 1925



இறப்பு 26 — 03 — 1990

### அமரர் கந்தையா பாலகிருஷ்ணர்

26. 03. 1990 அன்று இறைவனடி சேர்ந்த அமரர் கந்தையா பாலகிருஷ்ணர் (முன்னைய உரிமையாளர் கிழக்கு லங்கா புத்தகசாலை, திருக்கோணமலை) அவர்களது அந்தியேட்டி 24-04-1990செவ்வாய்க்கிழமை கீரிமலையிலும், 25. 04. 1990 புதன்கிழமை வீட்டுக் கிருத்தியம் அன்னாரது இல்லத்திலும் நடைபெறும்.

அத்தருணம் தாங்கள் சமுகந்தந்து அன்னாரது ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்தித்து மதிய போசனத்திலும் பங்குபற்றுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

எதிர்பாராத திடீர் மரணம் பற்றிய அறிவித்தல் உற்றார், உறவினர் நண்பர்களுக்கு உடன் அறிவிக்க முடியாமைக்கு வருந்துகின்றோம்.

மனைவி, மக்கள், மருமக்கள்
சகோதர, சகோதரிகள்
மாமன், மாமி, மைத்துனர், மைத்துனிமார்
பேரப்பிள்ளைகள்

(R/428)


## இடம் மாற்ற அறிவித்தல்

ஆஸ்பத்திரி வீதி, நவீன சந்தை, யாழ்ப்பாணம் 3ஆம் இலக்கத்தில் ( ரகுநாதன் பதிப்பகத்தில் ) இயங்கி வந்த

# ஹாஜீ அப்பாஸ் சன்

(பாடசாலை உபகரணங்கள், காகிதாதிகள் மொத்த சில்லறை விற்பனையாளர்கள்) என்னும் வியாபார ஸ்தாபனம்
20. 4. 1990 வெள்ளி முதல்
இல. 06 நவீன சந்தை, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்
என்ற விலாசத்தில் இயங்கும் என்பதை வாடிக்கையாளர்கள் அனைவருக்கும் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கின்றோம்

(B/805) எம். ஒ. உவைஸ்

### சிந்தனைக்கு

குடியேற்றம் ஆக்கிரமிப்பு இராணுவத்தை விட அபாயகரமானது. மண்ணின் மைந்தர்களை அழிப்பதற்கு பொருளாதாரத்தை அம்மண்ணிலேயே தேடிக்கொள்கிறது.

- ஓர் அறிஞர்

ஈழநாதம்

31, வைமன் வீதி, யாழ்ப்பாணம். 23 - 04 - 90

தொலைபேசி
ஆசிரிய பீடம்: 025-2839 நிர்வாக பீடம்: 2208

# எமது மண்ணை ஆக்கிரமிக்கும் குடியேற்றம்

திருக்கோணமலையில் இப்பொழுது வாழும் சிங்கள மக்களில் இருபத்திநான்கு வீதமானோருக்கு ஐம்பத்தொரு வீதமான நிலம் இருப்பதாக விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணித் தலைவர் திரு. கோ. மகேந்திரராசா (மாத்தயா) திருக்கோணமலையில் நடந்த பொதுக்கூட்டமொன்றில் ஆதாரத்துடன் எடுத்துக் காட்டியிருக்கிறார்.

1948 ஆம் ஆண்டில் இலங்கை சுதந்திரம் பெற்ற காலத்தில் திருக்கோணமலையில் சிங்கள மக்கள் ஆறுசத வீதத்துக்கும் குறைவாகவே இருந்தனர். தமிழ் மக்கள் பெரும்பான்மையாகவும் அடுத்த படியாக முஸ்லிம் மக்களும் வாழ்ந்தனர்.

உணவுற்பத்தி என்றும் விவசாயப் புரட்சி என்றும் அன்று பிரதம மந்திரியாக இருந்த டி. எஸ். சேனநாயகா அல்லை, கந்தளாய்க்குளப் பகுதிகளில் குடியேற்றத் திட்டங்களை உருவாக்கினார்.

கிழக்கில் இங்கினியாகல, அம்பாறையிலும் குடியேற்றத்திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டன.

ஆனால் திருக்கோணமலையைச் சிங்களப் பகுதியாக்கும் திட்டம் அந்தரங்கமாக வைக்கப்பட்டுப் படிப்படியாகச் செயல்படுத்தப்பட்டது.

சிங்களவரை திட்டமிட்டுக் குடியேற்றுவதற்காக மேலும் பல திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டன. இதற்கேதுவாக திருக்கோணமலை மாவட்ட அரசாங்க அதிபர் மற்றும் உயர் பதவிகளுக்கு சிங்களவரே நியமிக்கப்பட்டனர்.

பொலிஸ் நிலையங்களில் சிங்களப் பொலிசாரே கடமையாற்றினர்.

திருக்கோணமலை மாவட்டத்தை சிங்கள மயமாக்குவதிலும் திட்டமிட்ட சிங்களக் குடியேற்றத்தை தீவிரமாக நிறைவேற்றுவதிலும் ஆளும்கட்சி எதிர்க்கட்சி என்ற பேதமின்றி சகல சிங்கள அரசியல் கட்சிகளும் ஒற்றுமையாகச் செயல்பட்டன.

திருக்கோணமலையைச் சிங்கள மயமாக்குவதில் சிங்கள அரசியல்வாதிகளும் அரசியல்கட்சிகளும் போட்டி போட்டுக் கருமமாற்றின.

# யாழ். நகரில் புயலுக்குப் பின்

# பூரண அமைதி

**21ஆம் திகதி வெளிவந்த கட்டுரையின் தொடர்ச்சி**

யாழ். நகரில் யாழ். இந்துக் கல்லூரிக்கு அருகாமையில் உள்ள விடுதலைப் புலிகளின் தலைமைச் செயலகத்தில் நான் தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர்களைச் சந்தித்தேன். பெப்ரவரிக் கடைசி வரை இந்திய அமைதிப்படை இந்த வீட்டில் குடியிருந்தது. ஆண்களும், பெண்களும், முதியோரும், இளைஞருமாக பலர் அறையில் காத்திருப்பதை முதலில் அங்கு காணக்கூடியதாக இருந்தது. அரசாங்கம் சிங்களத்தை அரச கரும மொழியாகப் பிரகடனம் செய்த சமயம், கொழும்பில் தன் அரசாங்க உத்தியோகத்தை உதறித் தள்ளிவிட்டு வந்த புலிகளின் தலைவரான மொழிபெயர்ப்பாளரிடம் அங்கிருந்த கூட்டம் தாம் வந்திருந்த நோக்கத்தைத் தெரிவித்தனர். தனிப்பட்ட பிரச்சினைகள், குடும்பத் தகராறுகள், குடும்பத்தைக் கவனியாது குடிவெறியில் திரியும் கணவருக்கு எதிரான முறைப்பாடு- இத்தியாதி பிணக்குகளைத் தீர்க்கவே மக்கள் அங்கு வந்திருந்தனர். இரவு பகலாகக் கடமையில் ஈடுபட்டிருக்கும் விடுதலைப் புலிகள் முறைப்பாடுகளை விசாரித்துக் கொண்டிருந்தனர். விடுதலைப் புலிகள் தனித்தனியாக இருந்தே விசாரணைகளை மேற்கொண்டனர். தலைமைச் செயலகத்திலிருந்த விடுதலைப் புலிகள் தமது இராணுவத் தளபதிகளுடனும், தலைவர்களுடனும் வாக்கிரோக்கியில் தொடர்பு கொண்டு பேசிக் கொண்டிருந்தனர். இதேவேளை பல புலிகள் வருவதும் போவதுமாயிருந்தனர். விடுதலைப் புலிகள் சில ஒழுங்கு விதிகளை முகாம்களில் நடைமுறைப் படுத்தினர். அங்கு வருபவர்கள் கட்டிடத்துக்குள் புகை பிடிக்கக் கூடாது. குடிபோதையிலும் இருக்கக் கூடாது.

**பத்திரிகையாளருடன் பண்பாகப் பழகினர்**

புலிகள் பத்திரிகையாளரைப் பண்போடு உபசரித்தனர். தங்களோடு தொடர்பில்லாத ஒரு விடயம் குறித்துக் கேள்வி எழுப்பினால் புலிகள் அக் கேள்விகளுக்குப் பதில் சொல்வதைத் தவிர்த்துக் கொள்கிறார்கள். இதில் அவர்கள் மிகவும் கண்டிப்பானவர்கள். வலிகாமப் பகுதி அரசியல் பொறுப்பாளரான எஸ். ஆஞ்சநேயருடன் நான் உரையாடினேன். இவர் இருபதுகளில் உள்ள ஒரு இளைஞர். அவரோடு தொடர்பில்லாத விடயங்கள் நான் வினாக்களை எழுப்பிய சமயம், பண்புடன் அந்த விடயத்துடன் தொடர்புடையவர் வரும் வரை பொறுத்திருக்கும் படி கூறினார்.

இரண்டு அல்லது மூன்று முறைகள் வயர்லெஸ்சில் தொடர்பு கொண்ட பிறகு சரியானவர் வந்து சேர்ந்தார். அவர் தான் ஸ்ரான்லி டொமினிக். இவர் மக்கள் முன்னணியின் யாழ்.மாவட்டப்பொறுப்பாளர். இவரது வயது முப்பதுகளின் ஆரம்பமாக இருக்கலாம். கட்டுமஸ்தமான சரீரம்; கட்டையானவர். இடை நிறுத்தி மெதுவாகச் சம்பாஷிக்கும் டொமினிக் ஒரு மூர்க்கத்தனமான புலியாகும்.

திருக்கோணமலையில் இன்றைய நிலைபற்றிய விளக்கத்தோடு டொமினிக் தமது உரையாடலை ஆரம்பித்தார். வடக்கு, கிழக்கு மாகாணங்களில் நிர்வாக மையமான திருக்கோணமலையிலிருந்து இந்திய அமைதிப்படையும், போராளிக் குழுக்களும் வெளியேறிக் கொண்டிருந்தனர். விடுதலைப் புலிகள், அமைதிப் படைகள் வெளியேறிய இடங்களைத் தமது கட்டுப்பாட்டுக்குள்கொணர்ந்தனர். யாழ்ப்பாணத்தில் மக்களுக்கு அதிக வசதிகளை வழங்குவதற்குப் புலிகள் முயற்சித்தனர்.

கேள்வி ஒன்றுக்குப் பதிலளிக்கையில், அரசாங்கம் தமது கோரிக்கைகளை ஏற்குமானால் தாம் தேர்தலில் போட்டியிடுவோம் என்று டொமினிக் தெரிவித்தார். பிரிவினைவாதத்தைத் தாம் ஏற்கப் போவதில்லை என்று பாராளுமன்ற அங்கத்தினர் சத்தியப் பிரமாணம் செய்ய நிர்ப்பந்திக்கும் 6 ஆவது சட்டத் திருத்தத்தை இல்லாமல் செய்வது புலிகளின் கோரிக்கைகளில் ஒன்றாகும்.

முன்பு செய்யப்பட்ட நிர்வாக அமைப்பு இன்று வரை தொடர்வதாகவும், தமிழர் வதியும் பிரதேசங்களில் நிர்வாகத்தைச் செயற்படுத்தத் தாம் உதவவிருப்பதாக ஸ்ரான்லி டொமினிக் தெரிவித்தார். இதுவரை ஸ்ரீலங்கா பொலிஸ், இராணுவப் பிரிவுகள் யாழ்ப்பாணத்துக்குள் வரவில்லை. இந்திய அமைதிப் படை முற்றாக வெளியேறியதும், பொலிஸ் தனது வழமையான கடமைகளைச் செய்ய அனுமதி வழங்குவது பற்றி ஆலோசிக்கப்படும் என்றார்.

''அப்படியானால் இராணுவம்''

''இல்லை. அவர்கள் செயற்பாடுகள் தேவையில்லை''- என்பது டொமினிக்கின் பதிலாகும்.

பேட்டி முடிவடைந்ததும் புலிகள் நாம் இருக்கும் ஹோட்டலுக்கு எம்மைத் தமது வாகனத்தில் அழைத்துச் செல்லமுன் வந்தனர். கொழும்புக்கு அன்று திரும்பிப் போவதற்கு ஆசனங்களைப் பதிவு செய்யலாமா என்று அறிவதற்கு நாம் முதலில் புகையிரத நிலையத்துக்குப் போக வேண்டும் என்றார் எனது நண்பர்.

''நாங்கள் உங்களைஅழைத்துச் சென்று, ஆசனங்களைப் பதிவு செய்வதற்கான ஒழுங்குகளைச் செய்துதருகிறோம்'' என்றார்கள்.

அன்று ஞாயிற்றுக்கிழமை புகைவண்டியில் கூட்டம் அதிகம். எப்படியோ புலிகளின் நன்மையால், அவர்கள் புகையிரத நிலைய அதிபருடன் செய்த ஒழுங்குகளினால் நாம் இரவு மெயில் வண்டியில் பிரயாணத்தை மேற்கொள்ளக் கூடியதாகவிருந்தது. நாம் அவர்களிடமிருந்து விடை பெறும் சமயம், புலிகள் தாம் மதியவேளை வந்து எம்மைத் தமது வாகனத்தில் அழைத்துச் சென்று நகரின் சுற்றுவட்டாரங்களில் காண்பிக்கப் போவதாகச் சொன்னார்கள். நகரைச் சுற்றிப் பார்ப்பதில் இந்தியப் படைகள் இங்கு வந்ததினால் ஏற்பட்ட அழிவுகளை நீங்கள் நேரில் கண்டறிய முடியும் என்றார்கள்.

யாழ்ப்பாண நகரம் ஒழுங்கமைக்கப்பட்ட தார் ரோட்டுக்களைக் கொண்டது, வீதியின் இரு பக்கங்களிலும் சிறியளவிலான பங்களாக்கள், விக்ரோறியா கால அழகையும் தன்மையையும், கட்டடங்களின் வடிவமைப்பில் சாதாரணமாகக் காணக்கூடியதாகவிருந்தது. ஓலையால் வேயப்பட்ட வீடுகளும் காணப்பட்டன. குண்டு அல்லது துப்பாக்கி ரவைகளினால் ஏற்பட்ட வடுக்கள் இல்லாத வீடுகளே இல்லையெனலாம். யாழ்ப்பாணப் பொதுமக்கள் நூல் நிலையமும், மாவட்ட நீதிமன்றும் கைவிடப்பட்ட நிலையில் காணப்படுகின்றன.

நூல்கள், பதிவேடுகள், தளபாடங்கள் எதுவுமேயில்லை. அப் பிரதேசமே கைவிடப்பட்ட ஒரு பிரதேசமாக, ஏகாந்தமாகக் காணப்படுகிறது.

நகரத்தை எமக்குச் சுற்றிக் காட்டப் பஞ்சலிங்கம் என்ற பெயருடையவர் வந்தார். யாழ்ப்பாணத்தில் இந்திய அமைதிப் படையினர்

(6ஆம் பக்கம் பார்க்க)

**இக் கட்டுரையின் ஆசிரியர் ஏ.எம். பக்சார் கோயா அராப் நியூஸ் என்ற திசைரியின் ஆசிரியர் குழுவைச் சேர்ந்தவர். இந்திய அமைதிப்படைகள் வெளியேறிய சமயம் யாழ்ப்பாணத்துக்கு நேரில் வந்து, தான் கண்டதையும், கேட்டதையும் எழுதியுள்ளார். சவுதி அரேபியாவின் முதல் ஆங்கிலப் பத்திரிகையான Arab News சமகாலத்தில் றிதியா, ஜெடா, தர்கான், கெய்ரோ ஆகிய நகரங்களில் பிரசுரமாகின்றது.**

வயல்களுக்கு நீர் வழங்குவது

# ஊர்சுற்றி

**எழுதுவது**

இங்கு குழுக்களின் ஆட்சியும் அடாவடித்தனங்களும் 'கொடி நாட்டிப்' பறந்த காலத்தில் பத்திரிகைகள் சஞ்சிகைகளுக்குத் திடீர் திடீர் எனத் தடைகள் விதிக்கப்பட்டன. வவுனியா வரை வந்த பத்திரிகைகளும் சஞ்சிகைகளும் இப்பக்கம் தலை காட்ட முடியாமலிருந்தது. கிழக்கு மாகாணத்திலும் இதே நிலை இருந்தது.

இச்சமயத்தில் இலங்கை

செய்தித்தாள் கண்ணோட்டம் நிகழ்ச்சியிருக்கிறது. அந்தக் கண்ணோட்டம் நேர்கொண்டபார்வையாக இருக்கிறது. இங்குபோல் அது கோணல் பார்வையாக இருப்பதில்லை!

★ ★ ★

யாழ்ப்பாணத்தில் எப்போதுமே தொலைசே தொல்லையாகவே இருப்பது வழக்கம்.

இப்போது இதுபற்றிச் சொல்லவே வேண்டியதில்லை.

இரண்டு தினங்களுக்கு முன் யாழ்ப்பாணத்தில்

ஆனால் திருக்கோணமலையைச் சிங்களப் பகுதியாக்கும் திட்டம் அந்தரங்கமாக வைக்கப்பட்டுப் படிப்படியாகச் செயல்படுத்தப்பட்டது.

சிங்களவரை திட்டமிட்டுக் குடியேற்றுவதற்காக மேலும் பல திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டன. இதற்கேதுவாக திருக்கோணமலை மாவட்ட அரசாங்க அதிபர் மற்றும் உயர் பதவிகளுக்கு சிங்களவரே நியமிக்கப்பட்டனர்.

பொலிஸ் நிலையங்களில் சிங்களப் பொலிசாரே கடமையாற்றினர்.

திருக்கோணமலை மாவட்டத்தை சிங்கள மயமாக்குவதிலும் திட்டமிட்ட சிங்களக் குடியேற்றத்தை தீவிரமாக நிறைவேற்றுவதிலும் ஆளும்கட்சி எதிர்க்கட்சி என்ற பேதமின்றி சகல சிங்கள அரசியல் கட்சிகளும் ஒற்றுமையாகச் செயல்பட்டன.

திருக்கோணமலையைச் சிங்கள மயமாக்குவதில் சிங்கள அரசியல்வாதிகளும் அரசியல்கட்சிகளும் போட்டி போட்டுக் கருமமாற்றின.

திருக்கோணமலையில் திட்டமிட்டுக் குடியேற்றப்பட்ட சிங்களவர்கள் திட்டமிட்டு இனக்கலவரங்களையும் அடிக்கடி ஏற்படுத்தினர். இவர்களுக்குச் சிங்களப் பொலிசார் பாதுகாப்பளித்தனர். இவர்களின் பாதுகாப்புக்காக சிங்கள இராணுவ முகாம்களும் அமைக்கப்பட்டன.

தமிழ் அரசியல்வாதிகள் திட்டமிட்ட சிங்களக் குடியேற்றம் பற்றிப் பேசி வந்தனர். இதை எதிர்த்து அகிம்சை முறையில் நடத்திய போராட்டங்கள் ஆயுதப்படைகளினால் அடக்கி ஒடுக்கப்பட்டன.

இன்றும் கிழக்கில் முப்பத்தேழு இராணுவமுகாம்கள் இருக்கின்றன என்பதையும் திரு. மகேந்திரராசா எடுத்துக் காட்டியிருக்கிறார்.

1956 ஆம் ஆண்டில் ஆட்சிக்கு வந்த எஸ். டபிள்யு. ஆர். டி. பண்டாரநாயகா திருக்கோணமலையிலிருந்த பிரிட்டிஷ் கடற்படைத் தளத்தை எடுக்க முற்பட்டபோது வவுனியா எம். பியாக இருந்த 'அடங்காத் தமிழன்' சுந்தரலிங்கம் ''தமிழ் மக்களின் சம்மதமில்லாமல் கடற்படைத் தளத்தை கையளிக்க வேண்டாம்'' என்று பிரிட்டிஷ் மகாராணிக்குத் தமிழர்கள் தந்தியடிக்க வேண்டும் என்று கோரிக்கை விடுத்தார்.

சுந்தரலிங்கமும் ஒரு சிலருமே இப்படித் தந்தி அடித்தனர்.

1956 ஆம் ஆண்டின் பின் திருக்கோணமலை மாவட்டத்தில் இரண்டு சிங்களத் தொகுதிகள் ஏற்படுத்தப்பட்டன.

வடக்கு கிழக்கு மாகாணத்தைத் தனித்தனியாகப் பிரித்து வைத்த சிங்கள ஆட்சியாளர்கள் இப்பொழுது வடக்கு கிழக்கு இணைப்புக்கு சர்வஜன வாக்கெடுப்பு நடத்த வேண்டுமென்று கூறுகின்றனர்.

ராஜீவ் - ஜே. ஆர். ஒப்பந்தத்திலும் இப்படி ஒரு ஷரத்து இடம்பெற்றிருக்கிறது. இந்த ஒப்பந்தம் இப்போது செயலிழந்துவிட்டதால் சர்வஜன வாக்கெடுப்பு என்ற ஷரத்தும் செயலிழந்துவிட்டது.

வடக்கு மாகாணத்தை தமிழ் மாகாணம் என்று ஒப்புக்கொள்ளப்பட்டதுபோல் கிழக்கு மாகாணமும் தமிழ் மண் என்பது ஏற்றுக்கொள்ளப்பட வேண்டும் என்று திரு. மகேந்திரராசா சரியாகச் சுட்டிக் காட்டி இருக்கிறார்.

திட்டமிட்ட சிங்களக் குடியேற்றங்கள் திருக்கோணமலையில் இருக்கும் வரையிலும் சிங்கள ஆயுதப்படை முகாம்கள் திருமலையில் இருக்கும் வரையிலும், கிழக்கு மாகாணம் தமிழ் மண் என ஒப்புக்கொள்ளும் வரையிலும் தமிழ் பேசும் மக்களின் பாதுகாப்புக்காக விடுதலைப் புலிகள் ஆயுதங்களைக் கீழே வைக்கமுடியாது!

தன் அரசாங்க உத்தியோகத்தை உதறித் தள்ளிவிட்டு வந்த புலிகளின் தலைவரான மொழிபெயர்ப்பாளரிடம் அங்கிருந்த கூட்டம் தாம் வந்திருந்த நோக்கத்தைத் தெரிவித்தனர். தனிப்பட்ட பிரச்சினைகள், குடும்பத் தகராறுகள், குடும்பத்தைக் கவனியாது குடிவெறியில் திரியும் கணவருக்கு எதிரான முறைப்பாடு- இத்தியாதி பிணக்குகளைத் தீர்க்கவே மக்கள் அங்கு வந்திருந்தனர். இரவு பகலாகக் கடமையில் ஈடுபட்டிருக்கும் விடுதலைப் புலிகள் முறைப்பாடுகளை விசாரித்துக் கொண்டிருந்தனர். விடுதலைப் புலிகள் தனித்தனியாக

புலிகள் பத்திரிகையாளரைப் பண்போடு உபசரித்தனர். தங்களோடு தொடர்பில்லாத ஒரு விடயம் குறித்துக் கேள்வி எழுப்பினால் புலிகள் அக் கேள்விகளுக்குப் பதில் சொல்வதைத் தவிர்த்துக் கொள்கிறார்கள். இதில் அவர்கள் மிகவும் கண்டிப்பானவர்கள். வலிகாமப் பகுதி அரசியல் பொறுப்பாளரான எஸ். ஆஞ்சநேயருடன் நான் உரையாடினேன். இவர் இருபதுகளில் உள்ள ஒரு இளைஞர். அவரோடு தொடர்பில்லாத விடயங்கள் நான் வினாக்களை எழுப்பிய சமயம், பண்புடன் அந்த விடயத்துடன்

முயற்சித்தனர்.

கேள்வி ஒன்றுக்குப் பதிலளிக்கையில், அரசாங்கம் தமது கோரிக்கைகளை ஏற்குமானால் தாம் தேர்தலில் போட்டியிடுவோம் என்று டொமினிக் தெரிவித்தார். பிரிவினை வாதத்தைத் தாம் ஏற்கப் போவதில்லை என்று பாராளுமன்ற அங்கத்தினர் சத்தியப் பிரமாணம் செய்ய நிர்ப்பந்திக்கும் 6 ஆவது சட்டத் திருத்தத்தை இல்லாமல் செய்வது புலிகளின் கோரிக்கைகளில் ஒன்றாகும்.

முன்பு செய்யப்பட்ட நிர்வாக அமைப்பு இன்று வரை தொடர்வதாகவும், தமிழர் வதியும் பிரதேசங்களில் நிர்

## மக்கள் மடல்

# கிளிநொச்சி மாவட்ட சிறுபோக நீர்வழங்கல்

ஆசிரியர்,
ஈழநாதம்

தங்களது 20.04.90 நாளிதழில் வெளிவந்த கிளிநொச்சி மாவட்டத்தில் சில அதிகாரிகள் நீர் வழங்கலில் பாரபட்சம் காட்டுவதாக வெளிவந்த செய்தி சம்பந்தமாக பின்வரும் விளக்கத்தைத் தருகின்றேன்.

சிறுபோகப்பயிர்ச்செய்கைக் கூட்டங்கள் ஒவ்வொரு ஆண்டும் கூட்டப்பட்டு பயிர்ச் செய்கை ஒழுங்கு முறைகள்கணிக்கப்படுவது வழக்கம். கல்மடு - பெரியகுளத்திற்கான சிறுபோக பயிர்ச் செய்கைக் கூட்டம் 14.03 90ல் எனது தலைமையில் புளியம்பொக்கணை கமநலசேவை நிலையத்தில் நிகழ்ந்தது. அச்கூட்டத்தில் நீர்ப்பாசனப் பொறியியலாளர், குடியேற்ற அதிகாரி (த.பீடம்). பெரும்பாக உத்தியோகத்தர், குடியேற்ற உத்தியோகத்தர், வெளிக்கள உத்தியோகத்தர், நீர்ப்பாசனத்திணைக்கள வேலை மேற்பார்வையாளர், விவசாயப் போதனாசிரியர்கள் முதலியோரும், கல்மடு, கண்டாவளை, விவசாயிகளும் கலந்து கொண்டனர்.

இக் கூட்டத்தில் எல்லோராலும் ஏற்றுக் கொள்ளப்பட்ட தீர்மானப் பிரதி இத்துடன் இணைத்துள்ளேன். இதன்படி கல்மடுவில் 90 ஏக்கரும், கண்டாவளையில் 900 ஏக்கரும் செய்கை பண்ணுதற்கேற்ற நீர் இருக்கின்றது. கண்டாவளையில் டீ1, டீ2, டீ3, டீ4 கால்வாய்கள் குளத்திற்கு அருகில் இருப்பதனால் அதற்குள் இந்த 900 ஏக்கர்களையும் பங்கீடு செய்து விதைக்க நீர் வழங்குவது என முடிவு எடுக்கப்பட்டது. இக் குறித்த வாய்க்கால்களில் பயிர் செய்வதால் 3/4 ஏக்கர் வீதம் செய்கை பண்ண முடியும். டீ5, டீ6, டீ7, டீ8 வாய்க்கால்களில் செய்கை பண்ணுவதாயின் 1/2 ஏக்கர் வீதமே செய்கை பண்ண முடியுமென நீர்ப்பாசனப் பொறியியலாளர் தெரிவித்தார். கூட்டத்தில் கலந்துகொண்ட விவசாயிகள் 1, 2, 3, 4ம் வாய்க்கால்களிலேயே செய்கை பண்ண வேண்டுமெனத் தீர்மானித்தார்கள்.

இந் நிலையில் அக்கூட்டத்திற்குச் சமுகந் தராத கண்டாவளை விவசாயிகள் 12நாட்கள் கழித்து 5, 6, 7, 8ம்வாய்க்கால்களிலேயே இம் முறை சிறுபோகம் செய்ய வேண்டுமெனகோரியுள்ளனர். பயிர்ச் செய்கை கூட்டத்தில் எடுத்த முடிவை மாற்றுவது கடினம் என அவர்களுக்கு விளங்கப் படுத்தப்பட்டது. முடிவெடுத்தது அதிகாரிகளல்ல கூட்டத்திற்கு சமுகம் தந்த விவசாயிகளே ஆகும்.

கல்மடுக் குளத்தில் இருந்து பெரிய குளம் என்ற குளத்திற்கு நீர் வழங்கி, அதன் மூலமே கண்டாவளை வயல்களுக்கு நீர் வழங்குவது வழக்கம். கல்மடுக்குளத்திற்கு சிறுபோகப் பயிர்ச் செய்கை நடவடிக்கைகள் கூட்டத் தீர்மானப்படி நடந்து வருகின்றது. இந்த நிலையில் கண்டாவளைக்கு மீண்டும் சிறுபோகப் பயிர்ச்செய்கைக் கூட்டம் வைப்பது சாத்தியமில்லை எனவும், அவர்களுக்கு விளங்கப்படுத்தப்பட்டது. இன்று இக் கோரிக்கையை விடும் கண்டாவளை விவசாயிகள் சிலர் 14.03 90 அன்று கூட்டத்திற்கு சமுகந் தந்திருப்பின் அவர்களது வேண்டுகோள் பூர்த்தி செய்யப்பட்டிருக்கும் என்பதை அறியத் தருகின்றேன்.

க: குணராசா

மேலதிக அரசாங்க அதிபர்
(காணி)/பிரதிக் காணி
ஆணையாளர்,
அரசாங்க அதிபருக்காக
கிளிநொச்சி மாவட்டம்.

**ஆசிரியர் குறிப்பு:**

எமது செய்தியில் தவறில்லை கண்டாவளைவிவசாயிகள்மீ குற்றம் சாட்டுகிறார் மேலதிக அரசாங்க அதிபர். கண்டாவளை விவசாயிகள் விளக்கம் தந்தால் அதையும் நாப் பிரசுரிக்கத் தயாராக இருக்கிறோம்.

# ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் பாரபட்சம்

ஆசிரியர்,
'ஈழநாதம்'

ஒலிபரப்புக்கூட்டுத்தாபனம் வடக்கிலும் கிழக்கிலும் வாழும் தமிழ்பேசும் சமுதாயத்தினர்க்கு மட்டும் F.M அலைவரிசையை அறிமுகப்படுத்துவதில் மிகமிக பாரபட்சம் காட்டிவருகிறது. சிங்கள நிகழ்ச்சிகள் F.M. அலைவரிசையில் வடக்கிலும், கிழக்கிலும் எவ்வளவு துல்லியமாகக் கேட்டுக் கொண்டிருக்கும் வேளையில், தமிழ் நிகழ்ச்சிகள் ட்டும் இருட்டடிப்புச் செய்வது போன்று தெளிவாகக் கேட்கமுடியாத நிலைக்குக் கொண்டுவந்திருக்கின்றன. தமிழ் நிகழ்ச்சிகளை வடகிழக்கிலுள்ள தமிழ்பேசுவோரும்கூட தெளிவாகக்கேட்கும் பொருட்டு F. M. அலைவரிசையை தமிழ் நிகழ்ச்சிகட்கும் அறிமுகம் செய்தால் என்ன? தமிழ்பேசும் ராஜாங்க அமைச்சர்கள் இனிமேலாவது நடவடிக்கை எடுப்பார்களா?

கி. மரியநாயகம்

முல்லைத்தீவு.

# ஊர்சுற்றி

## எழுதுவது

இங்கு குழுக்களின் ஆட்சியும் அடாவடித்தனங்களும் 'கொடி நாட்டிப்' பறந்த காலததில் பத்திரிகைகள் சஞ்சிகைகளுக்குத் திடீர் திடீர் எனத் தடைகள் விதிக்கப்பட்டன. வவுனியா வரை வந்த பத்திரிகைகளும் சஞ்சிகைகளும் இப்பக்கம் தலை காட்ட முடியாமலிருந்தது. கிழக்கு மாகாணத்திலும் இதே நிலை இருந்தது.

இச்சமயத்தில் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் தமிழ்ச் சேவைப்பிரிவு புத்திசாதுரியமான ஒரு சேவையைத் தொடங்கியது.

வடக்கிலும், கிழக்கிலும் வாழும் மக்கள் இது கேட்டு மகிழ்ச்சியடைந்தனர்.

காலையில் தமிழ்ச் செய்தி அறிக்கை முடிந்ததும ஒலிபரப்பாகும் செய்தித்தாள் கண்ணோட்டமே இந்த நிகழ்ச்சியாகும்.

வடக்கேயும், கிழக்கேயும் வராத பத்திரிகைகளில் வெளிவந்த செய்திகள் வானொலியில் கேட்டு மக்கள் செய்திகளைத் தெரிந்து கொள்ள இது உதவியாக இருந்தது.

இந்தச் செய்திகளும் தரப்படுத்தித்தான் வாசிக்கப்பட்டதென்பது அப்பொழுது தெரியவில்லை.

இப்பொழுது யாழ்ப்பாணத்திலிருந்து வெளிவரும் நான்கு பத்திரிகைகளில் வெளியாகும் செய்திகள் வானொலியில் செய்தித்தாள் கண்ணோட்டத்தில் இடம்பெறும் முறையைப் பார்த்தால் இந்த நிகழ்ச்சியே தேவையில்லைப் போல் தோன்றுகிறது.

செய்தித்தாள் கண்ணோட்ட நிகழ்ச்சி இன்று சிலருக்குப் பிரசாரமாகவும் மற்றும் சிலருக்குப் பிழைப்பாகவும் அமைந்திருப்பதாகத் தெரிகிறது.

இப்பொழுதுதான் சகல பத்திரிகைகளும் சகல இடங்களுக்கும போவதற்குத்தடையில்லையே. இனியும் செய்தித்தாள் கண்ணோட்டம் என்ற நிகழ்ச்சி தேவைதானா?

தலண்டன் பி. பி. ஸி. யிலும் ஆங்கிலத்தில் செய்தித்தாள் கண்ணோட்டம் நிகழ்ச்சியிருக்கிறது. அந்தக் கண்ணோட்டம் நேர்கொண்டபார்வையாக இருக்கிறது. இங்குபோல் அது கோணல் பார்வையாக இருப்பதில்லை!

★ ★ ★

யாழ்ப்பாணத்தில் எப்போதுமே தொலைபேசி தொல்லையாகவே இருப்பது வழக்கம்.

இப்போது இதுபற்றிச் சொல்லவே வேண்டியதில்லை.

இரண்டு தினங்களுக்கு முன யாழ்ப்பாணததில் தொலைபேசி முற்றாகத் துண்டிக்கப்பட்டு விட்டது. தந்திசகம்பி வெட்டிய நால்வர் பிடிபட்டனர். தொலைபேசி இணைப்பு அலுவலகம் எதுவுமே செய்ய முடியாது என்று அறிவித்து விட்டது.

செய்திப்பத்திரிகைகளுக்குத் தொலைபேசித் தொடர்பில்லையென்றால் செய்தியே இல்லை என்பது அர்த்தம்.

அன்றிரவு நாங்கள் தொலைபேசி இணைப்பு அலுவலகம் சென்றோம். அங்குள்ள ஊழியர்கள் மிகுந்த ஒத்துழைப்புத் தந்தார்கள. கொழும்புடன் நாம் தொடர்பு கொண்டு நமது அலுவல்களை முடித்தோம். ஊழியர்களுக்கு நன்றி சொல்லிவிட்டு நாம் அலுவலகம் திரும்பிக்கொண்டிருந்தோம்.

மணிக்கூட்டு வீதியில் ஞானம்ஸ் ஹோட்டலுக்கு அருகே மக்கள் கூட்டமாக நின்றனர். சைகிள்களும் மோட்டார் சைக்கிள்களும் வீதியில் நின்றன.

யாரோ ஒருவர் உரத்த குரலில் பேசும் சத்தமும் கேட்டது. நாம் வீதியில் நின்றபடியே எட்டிப் பார்த்தோம்.

அது ஒரு தனியார் அஞ்சல் நிலையம். யாரோ ஒருவர் வெளியூரில் உள்ளவருடனோ வெளிநாட்டிலுள்ள வருடனோ தொலைபேசியில் உரத்தகுரலில் பேசிக்கொண்டு நின்றார்.

நமக்குப் பெரும் ஆச்சரியம் இந்தத் தனியார் அஞ்சல் நிலையத்துக்கு மட்டும் எப்படித் தொலைபேசி இணைப்புக் கிடைத்தது?

உங்களில் யாருக்காவது இந்த மர்மம் தெரியுமா?

ஈழநாதம்

# ஊர்திபவனி, ஊர்வலங்களுடன் புலிகளின் மேதின விழா!

(யாழ்ப்பாணம்)
எதிர்வரும் முதலாம் திகதி யாழ். மத்திய கல்லூரி மைதானத்தில் மாபெரும் மேதினக் கூட்டம் ஒன்றை விடுதலைப் புலிகள்மக்கள்முன்னணியினர் நடாத்தவுள்ளனர். இம் மேதினக்கூட்டத்தில்ஊர்திகளின் அலங்கார ஊர்வலங்களும் பெரிய அளவில் இடம்பெற உள்ளதாகவும் தெரிகின்றது.

குடாநாட்டில் ஒவ்வொரு பகுதியிலும் இருந்து ஊர்திகள் பவனி நடைபெறவுள்ளதாகவும் தெரிய வருகின்றது. இவ் ஊர்திகளில் பங்குபற்றும் சிறந்த ஊர்திகளுக்கு பரிசில்கள் வழங்கப்படவுள்ளதாகவும் தெரியவருகின்றது.

**ஓவியக் கண்காட்சி**

மேலும் மேதினத்தன்று ஓவியக் கண்காட்சி ஒன்றையும் விடுதலை மக்கள் முன்னணியினர் நடத்தவுள்ளனர். இவ் ஓவியக் கண்காட்சியில் பங்குபற்றும்ஓவியக்காரர்க்கும்பரிசில்கள் வழங்கப்பட வுள்ளன.

இவ் ஓவியக் கண்காட்சியில் பங்குபற்றுவோர் 30ஆம் திகதிக்கு முன்னர் ஓவியங்களை ஒப்படைக்கும்படியும் விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியினர் கோரிக்கை விடுத்துள்ளனர்.

**தொழிற்சங்கங்களுக்கு அழைப்பு**

இம் மேதினக் கூட்டத்தில் யாழ். மாவட்டத்தில் உள்ள சகல தொழிற்சங்கங்களையும் பங்குபற்றுமாறு விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியினர் அழைப்பு விடுத்துள்ளதாகவும் தெரிய வருகின்றது.

## தென்ஆசியா இவ்வருடம் வளர வாய்ப்புண்டு

(மணிலா)
நேபாளத்தைத் தவிர ஏனைய தெற்காசிய நாடுகள் இவ்வாண்டு பொருளாதார வளர்ச்சியில் முன்னேறவாய்ப்புக்கள் இருப்பதாக ஆசிய அபிவிருத்தி வங்கி புள்ளி விபரங்கள் மூலம் தெரிவித்துள்ளது.

இவ்வாண்டு 5.2 சதவீதமாக இது அதிகரிக்கும் எனவும் இங்கு சுட்டிக்காட்டப் பட்டுள்ள.

இதனால் இலங்கைக்கும் இவ்வாண்டு ஆசிய அபிவிருத்தி வங்கியின் உதவிகள் அதிகரிக்கலாம் எனவும் எதிர் பார்க்கப்படுகிறது.

## சுயமுயற்சிப் பண உதவி

(யாழ்ப்பாணம்)
கற்பகம் மணிப்புரி சிக்கனக் கடனுதவிக் கூட்டுறவுச் சங்க பதினான்காவது வருடாந்தப் பொதுக்கூட்டத்தில்சுய முயற்சிக்கு உதவும் வகையில் ரூபா 30,000 பணம் பன்னிரெண்டு பேர்களுக்குப் பகிர்ந்தளிக்கப் பட்டது.

மணிப்புரி கிராம அபிவிருத்திச் சங்கக் கட்டடத்தில் நேற்று நடந்த மேற்படி கூட்டத்துக்கு திரு. க. பாலசுப்பிரமணியம் தலமை வகித்தார்.

தேர்தலுக்காக

## வேலைத் திட்டத்தை நாம் முன்வைக்கவில்லை

''தேர்தலை வைத்தோ அல்லது வேறு திட்டங்களை வைத்தோ நாம் மக்கள் மத்தியில் வேலைத் திட்டங்களை செய்யவில்லை, உண்மையில் மக்களின் பிரச்சினைகளை அறிந்தே அவர்களுக்கு உதவ வேண்டும் என்ற நோக்குடன் செய்கின்றோம்.''

பாண்டிருப்பு முதலாம் குறிச்சியில் தேவா தையல் நிலையத் திறப்புவிழாவில் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு உரையாற்றிய அம்பாறை மாவட்ட புலிகள் மக்கள் முன்னணிப் பொறுப்பாளர் தி. காஸ்ரோ தெரிவித்தார்.

அவர் மேலும் பேசுகையில்-

''இதுபோன்ற பல்வேறு திட்டங்களை தமிழீழத்தில் நடைமுறைப்படுத்தி தொழிலற்று இருக்கும் இளைஞர், யுவதிகளுக்கு வசதியளிக்கவும் தீர்மானித்துள்ளோம்'' என்று கூறினார்.

## அரசின் . . .

(1 ஆம் பக்கத்தொடர்ச்சி)

மத்திய கிழக்கில் வேலை வாய்ப்புபெறவேண்டியவர்கள் சட்டப்படி செலுத்த வேண்டிய பணம் ரூ 1,700 ஆகும். ஆனால் தனியார் முகவர் நிலையங்கள் ரூபா 15,000 முதல் ரூபா 30,000 பெறுகிறார்கள் என்று அமைச்சர் தெரிவித்தார், இதே வேளை தனிப்பட்ட முறையில் முகவர் நிலையங்கள் ஊடாக மத்திய கிழக்கு நாடுகளுக்குச் செல்பவர்களுக்கு. விஸாவும் கடவுச் சீட்டும் வழங்குவது நிறுத்தப்பட்டுள்ளது.

தொழில் வாய்ப்புகளுக்கென வெளிநாடு செல்பவர்களுக்குக் கட்டாயமாக முகவர் நிலையங்கள் விமானச் சீட்டுகளையும் வழங்க வேண்டும் எனக் கட்டளை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

போக்குவரத்துச் சபையில்

## ஒப்பந்த ஊழியர்களுக்கு நிரந்தர நியமனம் எப்போது?

(அட்டாளைச்சேனை)
இலங்கைப் போக்குவரத்துச் சபையின் கீழ் சகல வெற்றிடங்களுக்கும் பொதுமக்களிடமிருந்து ஒப்பந்த அடிப்படையின் கீழ் ஊழியர்கள் அமர்த்தப்பட்டு இவர்களுக்கு நாள் சம்பளமே வழங்கப்பட்டிருக்கின்றது.

சுமார் ஐந்து வருடங்களுக்கு மேலாகியும் இதுவரைக்கும் எந்த விதமான விடிவும் கிடைக்கவில்லை. இதனால் ஊழியர்கள் மிகவும் கஷ்டத்தை எதிர் நோக்குகின்றனர்.

ஒரு நிரந்தர ஊழியனுக்கு வழங்கப்படும் எந்தவிதமான சலுகைகளும் அற்ற நிலையில் கவனிப்பாரற்று இவர்கள் இருக்கின்றனர். வடக்கு கிழக்கு மாகாண அரசாலும் சாரதி காப்பாளருக்கான நேர்முகப் பரீட்சையும் நடைபெற்றுஇதில்தெரிவானோரில் வடமாகாணத்திலுள்ளவர்களுக்கு நியமனம் வழங்கப்பட்டுள்ளது. ஆனால் கிழக்கு மாகாணத்திலுள்ளவர்களுக்கு நியமனம் வழங்கப்படவில்லை இதுவும் புறக்கணிக்கப் பட்டிருக்கிறது.

ஜனாதிபதியின் பணிப்பின் பேரில் சகல அரசாங்க, கூட்டுத்தாபன,சபைகளில் வேலை புரியும் ஒப்பந்த ஊழியர்களையும் நிரந்தர ஊழியர்களாக்கும்படி பணிப்புரைகள் வழங்கியிருந்தார்.

ஆனால் இதுகாலவரைக்கும் இலங்கைப் போக்குவரத்துச் சபையில் நடைமுறைக்கு வரவில்லையென ஒப்பந்த ஊழியர்களின் கிழக்கு மாகாணச் செயலாளர் எம். எல். எம். மக்கீன் தெரிவித்தார்.

## அபிவிருத்தி...

(1 ஆம் பக்கத்தொடர்ச்சி)

இருந்து புல்மோட்டை, திருக்கோணமலைக்கு சல்லும் கொக்குத்தொடுவாய் படகுச்சேவை இதுவரை ஆரம்பிக்கப்படவில்லை. எனவே இப்பகுதி முற்றாக புனரமைக்கப்பட வேண்டுமானால் பல தொண்டர் ஸ்தாபனங்கள் அரசு சார்பற்ற நிறுவனங்கள் இப்பகுதிகளைப் பார்வையிட்டு அபிவிருத்தி ஆய்வுகளை, வேலைகளை திட்டமிட்டு நிதி ஒதுக்கீடு செய்யப்படவேண்டுமென அப்பகுதி விடுதலைப் புலிகள் கரையோரப் பொறுப்பாளர் ரகு அவர்கள் அறிக்கை வெளியிட்டுள்ளார்.

மேலும் அவர் தென்னமரவாடியை சேர்ந்த நூற்றி அறுபத்தைந்து குடும்பங்கள் முல்லைத்தீவு உதவி அரச அதிபர் பிரிவுக் கிராமங்களில் அகதிகளாக வாழும் இவர்கள் போக்குவரத்து புனர்வாழ்வு புனரமைப்பு நடவடிக்கைகளுக்கு கிழக்கு மாகாணத்திலேயே தங்கி இருப்பதால் தமது சொந்தக் கிராமத்தில் மீளக் குடியமர முடியாமல் சிரமப்படுகிறார்கள் எனவும் தெரிவித்தார், (58)

## வட - பிராந்திய சங்கீதசபை பரீட்சைகள் ஒத்திவைப்பு

(யாழ்ப்பாணம்)
கல்விப் பொதுத் தராதர சாதாரண பரீட்சை விடைத்தாள் திருத்தும் பணிக்கு வட இலங்கை சங்கீத சபை பரிசோதகர்கள் சென்றுள்ளதால் சங்கீத சபை பரீட்சைகள் சில பின்போடப்பட்டுள்ளன.

இம் மாதம் 21ம் திகதியிலிருந்து நடைபெறாத பரீட்சைகள் மேமாதம் முதல் வாரத்தில் நடைபெறும் என வட இலங்கை சங்கீத சபை அதிகாரிகள் தெரிவிக்கின்றனர். மேலும் மன்னார் பகுதியில் கடந்த 19ம் 20ம் திகதிகளில் நடைபெறாத பரீட்சைகள் 29ம் 30 ஆம் திகதிகளில் நடைபெறும் எனவும் கிளிநொச்சி பகுதிகளில் 16ஆம் 17ஆம் திகதிகளில் நடைபெறாத பரீட்சைகள் 26ம் 27ம் திகதிகளில் நடைபெறும் எனவும் வட இலங்கை சங்கீத சபை அதிகாரிகள் தெரிவிக்கின்றனர். (லோ)

## மூன்று கோயில்களுக்கு புனரமைப்பு நிதி!

கலாசார அவமச்சினால் பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத் திட்டத்தின் கீழ் மாகாண சபையினூடாக புனரமைப்புக்கெனஒதுக்கப்பட்ட நிதி, முல்லைத்தீவு மாவட்டத்தில் மூன்று இந்துக் கோவில்களுக்கு மட்டும் கிடைத்துள்ளது, வற்றாப்பளை கண்ணகை அம்பாள் ஆலயம், ஊற்றங்கரை விநாயகர் ஆலயம், ஒட்டுசுட்டான் தான்தோன்றி ஈசுவரர் ஆகிய இம்மூன்று கோவில்களின் வேலைகள் பூர்த்தியடையும் நிலையை அடைந்துள்ள போதிலும், மற்ற மதக் கோயில்களுக்கு இந்த நிதி கிடைக்கவில்லையென நிர்வாகிகள் அதிருப்தி தெரிவித்துள்ளனர். (58)

## வினாத்தாள் திருத்தும் நிலையத்தில்குடிநீர்வசதியில்லை

(யாழ்ப்பாணம்)
கல்விப் பொதுத் தராதர (சாதாரணம்) பரீட்சை விடைத்தாள்களுக்குப் புள்ளியிடும் பணி சென்ற சனியன்று யாழ்ப்பாணத்தில் ஐந்து நிலையங்களில் ஆரம்பமாகியது. களைப் புள்ளியிடும் வேலையில் ஈடுபட்ட ஆசிரியர்கள் மதியபோசன உணவைச் சாப்பிட்ட பிறகு குடிக்கத் தண்ணீர் வசதி இல்லாமல் திண்டாடினார்களாம். பிறகு எப்படியோ பி.ப, 2 மணியளவில் குமாய்களில் நீர் சொட்டு

## விளையாட்டுப் போட்டி

(கைதடி)
கைதடி இந்து இளைஞர் கழக வருடாந்த விளையாட்டுப் போட்டி கைதடி கிழக்கு கடலேரி சனசமூக நிலைய மைதானத்தில் நடைபெற்றது

கைதடி பிரதேச மக்கள் முன்னணிப் பொறுப்பாளர் திரு. அப்பன் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டார்.

## கூட்டுறவுச் சங்க கடன் வசதிகள்

(புங்குடுதீவு)
புங்குடுதீவு நயினாதீவு பலநோக்கு கூட்டுறவு சங்க கிராமிய வங்கியிலிருந்து மாதாந்த ஓய்வூதியம் பெறும் புங்குடுதீவு நயினாதீவு பகுதிகளில் வாழும் ஓய்வூதியக்காரக்கு இச்சங்கத்தின் கிளை ஸ்தாபனத்திலிருந்து தவணைஅடிப்படையில் ரூபா ஆயிரத்திற்கு

## புங்குடுதீவில் பொதுக்கூட்டமும் தேனிசை நிகழ்ச்சியும்

(புங்குடுதீவு)
நாளை புங்குடுதீவு மகா வித்தியாலய முன்றலில் விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியின் மாபெரும் பொதுக் கூட்டமும், தேனிசைச் செல் லையயும் தீவுப்பகுதிப் பொறுப்பாளர் ஜேம்ஸ் ஆரம்பித்து வைப்பார். அரசியற் பொறுப்பாளர் காஸ்ரோ தலைமை வகிப்பார்.

இவ் இசை நிகழ்ச்சியில்

## இரவு 10.30 மணி வரை மினிபஸ்

சாதாரண பரீட்சை விடைத் தாள் திருத்தும் பணிக்கு வட இலங்கை சங்கீத சபை பரிசோதகர்கள் சென்றுள்ளதால் சங்கீத சபை பரீட்சைகள் சில பின்போடப்பட்டுள்ளன.

இம் மாதம் 21ம் திகதியிலிருந்து நடைபெறாத பரீட்சைகள் மேமாதம் முதல் வாரத்தில் நடைபெறும் என வட இலங்கை சங்கீத சபை அதிகாரிகள் தெரிவிக்கின்றனர். மேலும் மன்னார் பகுதியில் கடந்த 19ம் 20ம் திகதிகளில் நடைபெறாத பரீட்சைகள்

## இரவு 10.30 மணி வரை மினிபஸ் சேவை

(யாழ்ப்பாணம்)

இன்றும் நாளையும் யாழ். முற்றவெளி மைதானத்தில் நடைபெறவுள்ள தேனிசைச் செல்லப்பாவின் இசைநிகழ்ச்சியில் கலந்து கொள்ளும்மக்கள் வீடுசென்றடைவதற்காகசகல மினிபஸ்களும் இரவு 10.30 மணிவரையும் சேவையாற்றும்படி வட பிராந்திய மினிபஸ் சேவைச் சங்கத் தலைவர் கேட்டுள்ளார்.

### யாழ். நகரில்

(5 ஆம் பக்கத் தொடர்ச்சி)

புரிந்த அட்டகாசங்களைப் பற்றியும், தந்திரோபாயங்களைப் பற்றியும் அவர் எம்மிடம் பிரஸ்தாபித்தார். இவற்றையெல்லாம் நாம் யாழ்ப்பாண மக்களிடம் ஏலவே கேட்டறிந்தோம்.

நேரந்தவறாமை

கண்டிப்பாக நேரம் தவறாமல் குறித்த நேரத்துக்கு விடுதலைப் புலிகள் எம்மை அழைத்துச் செல்ல ஹொட்டலுக்கு வந்தமையிலிருந்து அவர்கள் தமது விடயங்களில் எப்படி நடந்து கொள்பவர்கள் என்பதை உணர்ந்து கொள்ளக்கூடியதாகவிருந்தது.

யுத்தத்தினால் பாதிப்புக்குள்ளான யாழ்ப்பாணத் தீபகற்ப மக்கள் மத்தியில் விடுதலைப் புலிகள் கட்டுப்பாட்டுடனும், ஒழுங்குடனும் நடந்து கொள்கிறார்கள். யாழ்ப்பாணத் தீபகற்பத்தில் சமாதானத்தையும், வழமையாக வாழ்க்கையையும் விடுதலைப் புலிகள் நிலைநாட்டியுள்ளனர். யாழ்ப்பாணத்தில் வியாபாரமும் நன்றாக நடைபெறுகின்றது.

(நன்றி: Arab News)

பகுதிகளில் 16ஆம் 17ஆம் திகதிகளில் நடைபெறாத பரீட்சைகள் 26ம் 27ம் திகதிகளில் நடைபெறும் எனவும் வட இலங்கை சங்கீத சபை அதிகாரிகள் தெரிவிக்கின்றனர். (லோ)

களுக்குக் கட்டாயமாக முகவர் நிலையங்கள் விமானச் சீட்டுகளையும் வழங்க வேண்டும் எனக் கட்டளை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

## வினாத்தாள் திருத்தும் நிலையத்தில்குடிநீர்வசதியில்லை

(யாழ்ப்பாணம்)

கல்விப் பொதுத் தராதர (சாதாரணம்) பரீட்சை விடைத்தாள்களுக்குப் புள்ளியிடும் பணி சென்ற சனியன்று யாழ்ப்பாணத்தில் ஐந்து நிலையங்களில் ஆரம்பமாகியது. இந்த ஐந்து நிலையங்களில் ஒன்றான மகளிர் பள்ளிக்கூடம் ஒன்றில் விடைத்தாள்களைப் புள்ளியிடும் வேலையில் ஈடுபட்ட ஆசிரியர்கள் மதியபோசன உணவைச் சாப்பிட்ட பிறகு குடிக்கத் தண்ணீர் வசதி இல்லாமல் திண்டாடினார்களாம். பிறகு எப்படியோ பி.ப, 2 மணியளவில் குழாய்களில் நீர் சொட்டு சொட்டாக வர ஆரம்பித்தது.

### யாழ் பழைய.:

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

சான்றிதழ் விண்ணப்பங்களை ஏற்கும் பகுதி, காணிக் கந்தோர், நிறுவைகள், அளவைகள் திணைக்களம் என்பன இயங்கி வந்தன.

அதன் பின்னர் இக்கட்டடம் பலத்த சேதமடைந்திருந்தது. இதனால் இந்த அலுவலகங்கள் புதிய செயலககட்டிடத்திற்கு இடமாற்றம் செய்யப் பட்டன.

இதனால் புதிய கட்டடத்தில் இடநெருக்கடி மற்றும் வசதியீனங்கள் ஏற்பட்டுள்ளதையடுத்து இது திருத்தியமைக்கப்படவுள்ளது. (24)

### இன்று மாலை..

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

காசி ஆனந்தன் ஆகியோர் பேசுவார்கள்.

இன்று மாலை யாழ்,முற்றவெளி மைதானத்தில் நடைபெறும் மாபெரும் இசை நிகழ்ச்சிக்கு வருகை தரும் மக்கள், தங்கள் இடங்களுக்குத் திரும்பிச் செல்வதற்குப் பேருந்து வசதிகள் செய்யப்பட்டுள்ளன. இலங்கைப் போக்குவரத்துச் சபையும், மினி பஸ் சங்கமும் மற்றும் தனியார் பஸ்களும் போக்குவரத்துச் சேவையிலீடுபடும்.

### கச்சதீவு மீது . . .

( 1ஆம் பக்கத் தொடர்ச்சி )

டதும், தமிழ்நாட்டில் இந்திரா காங்கிரஸ்காரர் மீனவர்களுக்குப் பாதுகாப்பு வழங்கப்பட வேண்டும்என கோரிக்கை விடுவதும் குறிப்பிடத்தக்கது.

### ஆளுநர் . . .

(1 ஆம் பக்கத்தொடர்ச்சி)

குழு கூட்டத்தில் பங்குபற்றுவதாக திட்டமிடப்பட்டிருந்தது. ஆனால் அவர் அதனை திடீரென ரத்துச் செய்துவிட்டு இங்கிருந்து சென்றுவிட்டதாக செயலக அதிகாரிகள் தெரிவித்தார்கள்.

திரு. நளின் செனவிரட்ன அவர்கள் அண்மையில் யாழ். மாநகர சபைக்கும் விஜயம் செய்வதாக உறுதிகூறி ஊழியர்களையும் அதிகாரிகளையும் ஏமாற்றியதும் குறிப்பிடத் தக்கதாகும்.

இவருடைய விஜயம் ரத்தானதை தொடர்ந்து நேற்று யாழ். செயலகத்தில் நடைபெற இருந்த புனரமைப்பு குழு கூட்டமும் பின் போடப்பட்டு இன்று திரு. நளின் செனவிரட்ன இல்லாமலேயே நடைபெறும் எனவும் தெரிய வருகிறது. (லோ)

### 2 ஆம் தர . . .

(1 ஆம் பக்கத்தொடர்ச்சி)

இம்மாதம் 25 ஆம் திகதி புதன்கிழமை காலை 9 - 30 மணிக்கு நேர்முகப் பரீட்சை நடைபெறவுள்ளது.

பத்தரமுல்லயிலுள்ள கல்வியமைச்சு அலுவலகமான இசுருபாயவில் இந்த அதிபர்களைச் சமுகம் தருமாறு கல்விச் சேவைகள் ஆணைக்குழு அறிவித்துள்ளது.

தற்போது க. பொ. த. (சாதாரண)பரீட்சை விடைத்தாள்களுக்கு மதிப்பீடு செய்பவர்களுக்கு பிறிதொருதினத்தில் நடாத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

நிதி, முல்லைத்தீவு மாவட்டத்தில் மூன்று இந்துக் கோவில்களுக்கு மட்டும் கிடைத்துள்ளது, வற்றாப்பளை கண்ணகை அம்பாள் ஆலயம், ஊற்றங்கரை விநா

## விளையாட்டுப் போட்டி

(கைதடி)

கைதடி இந்து இளைஞர் கழக வருடாந்த விளையாட்டுப் போட்டி கைதடி கிழக்கு கடலேரி சனசமூக நிலைய மைதானத்தில் நடைபெற்றது

கைதடி பிரதேச மக்கள் முன்னணிப் பொறுப்பாளர் திரு. அப்பன் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டார்.

## சிரமதானம்

(சம்மாந்துறை)

தமிழீழ விடுதலைப் புலிகளின் சம்மாந்துறைப் அரசியல் பொறுப்பாளர் நிதி தலைமையின்கீழ், மிகவும் பாதிப்புக்குள்ளான சம்மாந்துறை ஸ்ரீ பத்திரகாளியம்மன் ஆலயம் சிரமதானப் பணி மூலம் கிராமமக்கள் துப்பரவு செய்தனர்.

இச்சிரமதானத்திற்கு மட்டக்களப்புத்தரவை, தமிழ்க் குறிச்சி ஆகிய இடங்களில் இருந்தும் ஏறத்தாழ அறுநூறு பேர் பங்குபற்றினர், (57)

### 2,000 தொண்டர்- --

(1 ஆம் பக்கத்தொடர்ச்சி)

இந்திய இராணுவம் பயிற்சி வழங்கியது குறிப்பிடத்தக்கது

மக்கள் தொண்டர் படையில் ஈ. என். டி. எல், எவ், ஈ. பி. ஆர் எல்,எவ். ரெலோ குழுக்களைச் சேர்ந்தவர்களே சேர்க்கப்பட்டார்கள்.

வவுனியா மாவட்டத்தில், இந்திய இராணுவத்தின் நேரடிக் கண்காணிப்பின் கீழிருந்த 400 மக்கள் தொண்டர் படையினர் இந்திய இராணுவத்தின் வெளியேற்றத்துடன் தாமும் வெளியேறிவிட்டனர். இவர்கள் இந்திய இராணுவத்துடன் இந்தியா சென்றிருக்கலாம் என்று பாதுகாப்பு அதிகாரிகள் கருதுகின்றனர்.

விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டின் கீழ் வடக்கும், கிழக்கும் வந்த பிறகு சுமார் 600 மக்கள் தொண்டர் படையினர்கள் தான் ஓடாமல் எஞ்சியுள்ளார்களாம்.

கட்டம் கட்டமாக இந்தியப் படைகள் வெளியேறிய போது அவர்களுடன் சேர்ந்து மக்கள் தொண்டர் படையினரும் வெளியேறி விட்டார்கள் என்று சிரேஷ்ட பாதுகாப்பு அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

போதிலும், மற்ற மதக் கோயில்களுக்கு இந்த நிதி கிடைக்கவில்லையென நிர்வாகிகள் அதிருப்தி தெரிவித்துள்ளனர். (58)

## கூட்டுறவுச் சங்க கடன் வசதிகள்

(புங்குடுதீவு)

புங்குடுதீவு நயினாதீவு பலநோக்கு கூட்டுறவு சங்க கிராமிய வங்கியிலிருந்து மாதாந்த ஓய்வூதியம் பெறும் புங்குடுதீவு நயினாதீவு பகுதிகளில் வாழும் ஓய்வூதியக்காரக்கு இச்சங்கத்தின் கிளை ஸ்தாபனத்திலிருந்து தவணைஅடிப்படையில் ரூபா ஆயிரத்திற்கு மேற்படாமல் உணவுப் பொருட்கள் கடனாக வழங்கப்பட்டு வருகின்றன.

இம் முறையில் கடனைப் பெறும் ஓய்வூதியகாரர் தமது ஓய்வூதியத்தைப் பெற்றவுடன் கடனைக் கட்டிவிட்டு மீண்டும் கடன் பெறமுடியும்.

இத் திட்டம் கடந்த ஆறு மாதங்களாக செயற்படுத்தப் பட்டு வருகின்றது.

## தரிப்பிடமிருந்தும் பஸ் நிற்பதில்லை

(கொழும்புத்துறை)

கைதடி ஆயுள்வேத வைத்திாசாலைக்கு முன்பாகப் பஸ் தரிப்பு நிலையம் இருந்த போதிலும் இலங்கைப் போக்குவரத்துச் சபைப் பஸ் வண்டிகள் சில நிறுத்தப்படுவதில்லை என்று புகார் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இப் பஸ்வண்டிகள் மணி அடித்தாலும் நிறுத்தப்படாது கைதடிச் சந்தியிலேயே நிறுத்தப்படுவதால் கைதடி ஆயுள்வேத வைத்தியசாலை நோயாளர்கள் அதிக சிரமத்திற்கு ஆளாகி வருகின்றனர்.

வடபிராந்திய போக்குவரத்துச் சபையினர் இவ்விடயத்தில் கவனம் செலுத்துவார்களா என்று பொதுமக்களும், நோயாளரும் கோருகின்றனர்.

கும்படி பணிப்புரைகள் வழங்கியிருந்தார்.

ஆனால் இதுகாலவரைக்கும் இலங்கைப் போக்குவரத்துச் சபையில் நடைமுறைக்கு வரவில்லையென ஒப்பந்த ஊழியர்களின் கிழக்கு மாகாணச் செயலாளர் எம். எல். எம். மக்கீன் தெரிவித்தார்.

வாழ்வு புனரமைப்பு நடவடிக்கைகளுக்கு கிழக்கு மாகாணத்திலேயே தங்கி இருப்பதால் தமது சொந்தக் கிராமத்தில் மீளக் குடியமர முடியாமல் சிரமப்படுகிறார்கள் எனவும் தெரிவித்தார், (58)

## புங்குடுதீவில் பொதுக்கூட்டமும் தேனிசை நிகழ்ச்சியும்

(புங்குடுதீவு)

நாளை புங்குடுதீவு மகாவித்தியாலய முன்றலில் விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியின் மாபெரும் பொதுக் கூட்டமும், தேனிசைச் செல்லப்பாவின் இசை நிகழ்ச்சியும் இடம்பெறும்.

இப் பொதுக்கூட்டத்திற்கு விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணித் தலைவர் கோ, மகேந்திரராசாவும், பொதுச் செயலாளர் யோகரெட்னம் யோகியும் கவிஞர் காசி ஆனந்தனும் மற்றும் பல விடுதலைப் புலிகளின் உறுப்பினர்களும் கலந்து கொள்ளவுள்ளனர்.

இக்கூட்டத்தினையும் தேனிசை இசை நிகழ்ச்சியையும் தீவுப்பகுதிப் பொறுப்பாளர் ஜேம்ஸ் ஆரம்பித்து வைப்பார். அரசியற் பொறுப்பாளர் காஸ்ரோ தலைமை வகிப்பார்.

இவ் இசை நிகழ்ச்சியில் பங்குபற்றுபவர்களை கலை கலாசார பிரிவுப் பொறுப்பாளர் புதுவை இரத்தினதுரை அறிமுகம்செய்து வைப்பார்,

## ஆணையாளருக்கு நன்றி

(கொழும்புத்துறை)

பாஷையூர்ப் பகுதியில் சீரான நீர் விநியோகம் சம்பந்தமாக உடன்நடவடிக்கை மேற்கொண்டமைக்காகப் பாஷையூர் மக்கள் முன்னேற்றச்சங்கச் சனசமுக நிலையம் யாழ். மாநகர ஆணையாளருக்கு பாராட்டும், நன்றியும் தெரிவிக்கத் தீர்மானம் நிறைவேற்றியுள்ளது.

### வடபகுதி.,

(1 ஆம் பக்க தொடர்ச்சி)

இதனால் சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, வவுனியா போன்ற ரயில் நிலையங்களில் பயணிகள் ஏறமுடியாத நிலை ஏற்படுகிறது,

## கோமாரி தபாலகத்திற்கு றேடியோ தொலைபேசி

(அம்பாறை நிருபர்)

பொத்துவில் தொகுதியைச் சேர்ந்த கோமாரிக் கிராமத்தில் உள்ள உப தபாலகத்திலிருந்து கடந்த சில வருடங்களுக்கு முன்னர் தீய சக்திகளினால் அபகரித்துச் செல்லப்பட்ட தொலைபேசிக் கருவிக்குப் பதிலாக றேடியோ தொலைபேசி வசதி செய்து கொடுக்கப்பட வேண்டுமென அம்பாறை மாவட்ட மக்கள் முன்னணி பொறுப்பாளர் திரு காஸ்ரோ தொலைபேசி தொடர்பு உயர் அதிகாரிகளுடன் பேசியதைத் தொடர்ந்து இம் மாதத்துக்கிடையில் றேடியோ தொலைபேசி வசதி செய்யப் படவுள்ளது.

இக் கிராம மக்கள் கடந்த பலவருடங்களாக வெளியிடத் தொடர்புகள் இல்லாமல் இருந்தமை குறிப்பிடத்தக்கதாகும். (48)


## நிதர்சனம் பாடல்கள்

"நிதர்சனம் பாடல்கள்" கசற் இதுவரை காலமும் வெளிவந்த பாடல்களில் தெரிவு செய்யப்பட்ட ஒரு தொகுப்பு இன்று தேனிசைச் செல்லப்பாவின் பாடல் நடைபெறும் இடத்தில் இக் கசற்றுக்களைப் பெற்றுக் கொள்ளலாம்

விலை ரூ: 50/- 11 பாடல்கள் இடம் பெறும்.


இப்பத்திரிகை யாழ்ப்பாணம் வைமன் வீதி, 31-ஆம் இலக்கத்திலுள்ள 'ஈழநாதம்' பணிமனையில் 1990 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் -23ஆம் தேதி அச்சிட்டு வெளியிடப்பெற்றது.